இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 10 | திகதி : 27.07.2025 | விலை : 50.00

# எம் திருவுளமல்ல இறைதிருவுளமே எம் வாழ்வாக வேண்டும்

## கனடா மிட்லண்ட் மறைசாட்சிகள் திருத்தலத் திருப்பயண திருப்பலியில் – யாழ் ஆயர்



கனடா, ரொறன்ரோ, மிசிஷாக்கா புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீக பணியகத்தினால் முன்னெடுக்கப்பட்ட யூபிலி ஆண்டுக்கான மிட்லண்ட் மறைசாட்சிகள் திருத்தல திருப்பயணத் திருயாத்திரை கடந்த ஜுலை மாதம் 12ம் திகதி கனடா மிட்லண்ட் மறைசாட்சிகள் திருத்தலத்தில், பரிபூர்ண ஆன்மீக புதுப்பித்தலை நிறைவேற்றும் விதமாக மிகவும் சிறப்பாக நடைபெற்றது. யூபிலி ஆண்டில் எமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்து நம்பிக்கையின் திருப்பயணிகளாக வாழ இத்திருப்பயண திருயாத்திரையானது புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீக பணியகத்தின் பரிபாலகர் அருட்பணி கனிசியஸ்ராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக இடம் பெற்றது. யூபிலி திருநாள் திருப்பலியை, யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். ஆயர் அவர்கள் தமது மறையுரையில்: நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் பயணிக்கும் இவ்யூபிலி ஆண்டில், நான் எனது என்ற சுயநலத்தை களைந்து, அன்னை மரியாவைப் போல பிரமாணிக்கமாக வாழ வேண்டும், பிறர் நலனில் அக்கறை கொண்டு, தன்னை மையப்படுத்தி வாழாது பிறரை மையப்படுத்தி வாழவேண்டும், கணவன் மனைவிக்கிடையே புரிந்து கொள்ளுதல், அன்பு, ஒற்றுமை விட்டுக்கொடுப்பு போன்ற பண்புகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். என வலியுறுத்தினார். இறுதியாக, ஆயர் அவர்களினால் அன்னையின் திருச்சுருப ஆசீர் வழங்கப்பட்டது. திருப்பலிக்கு முன்னரான நற்கருணை வழிபாட்டினை புனித ஆரோக்கிய அன்னை பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் நிறைவேற்றினார். கனடாவின் பல பாகங்களிலிருந்தும் இவ்யாத்திரையை மேற்கொண்ட இறைமக்கள் பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தைப் பெற்று பரிபூரண ஆன்மீகப் பலன்களைப் பெற்றுச் சென்றனர்.

# நான் இறை மக்களின் மேய்ப்பனாக என்னை உருவாக்கியது புனித பத்திரிசியார் கல்லூரியே!

## பரிசளிப்பு விழாவில் மன்னார் ஆயர்







புனித பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த ஜுலை 24ம் திகதி கல்லூரியின் முகாமையாளரும், யாழ் ஆயருமாகிய பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது. இப்பரிசளிப்பு விழாவில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி அன்ரனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தமது உரையில் மேற்கண்டவாறு கூறிப்பிட்டார் . ஆயர் மேலும் தெரிவிக்கையில் தாம் ஆயர் நிலையை அடைய தம்மை உருவாக்கியது யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மடுத்தீனார் குருமடம், கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருமடம் ஆகிய மூன்று நிறுவனங்களே காரணம் என குறிப்பிட்டார். அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களை வாழ்த்திய ஆயர் அவர்கள் பரிசில்களைப் பெற்ற மாணவர்களையும் பல்வகையில் ஊக்கப்படுத்தினார். இப்பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும் சட்டவாளருமாகிய திரு மரியதாஸ் யூட் டினேஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

பரிசளிப்பு விழாவின் அனைத்து நிகழ்வுகளையும் கல்லூரி அதிபர் அருட்பணி A. திருமகன் அடிகளாரும், உப அதிபர் அருட்பணி மகான் அலோசியஸ் அடிகளாரும் அவர்களோடு இணைந்து பணிபுரியும் குருக்களும் ஒழுங்கு செய்திருந்தனர்.

## யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் மன்ற செந்தமிழ் விழா



நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன் விழாவை சிறப்பித்து யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் மன்றம் முன்னெடுத்த செந்தமிழ் விழா கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் குருமட மாணவர்கள் இரு அணிகளாகப் பிரிந்து கலை நிகழ்வுகளை முன்னெடுத்தனர். கலை நிகழ்வுகளில் கவிதை, பாடல்கள், நாடகங்களுடன் "தமிழுக்கு அழகு சேர்ப்பது மரபுக் கவிதையா புதுக்கவிதையா" என்னும் தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றதுடன் செந்தமிழ் விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் முதன்மை அன்பாளராகவும் ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி முதல்வர் அருட்தந்தை அன்ரன் அமலதாஸ் அவர்கள் சிறப்புத் தமிழ் விரும்பியாகவும் திருமறைக்கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர் திரு. தைரியநாதன் யஸ்ரின் ஜெலூட் அவர்கள் மேன்மைமிகு தமிழ் அன்பராகவும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## மல்வம் திருக்குடும்ப ஆலய வருடாந்தத் திருவிழா



மல்வம் திருக்குடும்ப ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்தது

தொடர்ந்து 05ஆம் திகதி நற்கருணை விழாவும் 06ஆம் திகதி திரு விழாவும் இடம்பெற்றன. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணை விழா திருப்பலியை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை யேசுதாஸன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் 2024ஆம் ஆண்டு தேசிய விவிலியத் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பும் மல்வம் றோ.க பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி மாற்றலாகி செல்லும் திரு. றூபதன் அவர்களின் பிரியாவிடையும் தொடர்ந்து திரு. புவனதாஸ் அவர்களின் எழுத்துருவில் ஆலயப் பாடகர் குழாம் மற்றும் பங்குமக்களினால் பாடப்பட்ட திருக்குடும்பத்தின் 12 ஆராதனை பாடல்களை உள்ளடக்கிய "நசரேத்தூர் இயேசு" இறுவட்டு வெளியீடும் இடம்பெற்றன.

## மாதா தொலைக்காட்சி இயக்குநர் யாழ். மறைமாவட்டத்திற்கு வருகை



இந்தியாவில் இயங்கும் மாதா தொலைக்காட்சி இயக்குநர் அருட்தந்தை டேவிட் ஆரோக்கியம் அவர்கள் யாழ். மறை மாவட்டத்திற்கு வருகை தந்து யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு கடந்த 29 ஆம் திகதி யாழ். மறை மாவட்ட ஆயர் இல்லத்தில் நடை பெற்றது. அத்துடன் அன்றைய தினம் அருட் தந்தை டேவிட் ஆரோக்கியம் அவர்கள் மன்னார் மடு திருத்தலத்தை தரிசித்ததுடன் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## ஆயருடனான சந்திப்பு



யாழ். மாநகர சபையின் புதிய துணை மேயராகப் பதவியேற்றுள்ள திரு. இம்மானுவேல் தயாளன் அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு யூலை மாதம் 02ஆம் திகதி புதன்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### சிந்துப்பாத்தி புதைகுழியும் சர்வதேச நீதி விசாரணையும்

யாழ்ப்பாணம் அரியாலை சிந்துப்பாத்தி பிரதேசத்தில் உள்ள மனிதப் புதைகுழியில் இருந்து ஒவ்வொரு நாளும் எலும்புக்கூடுகள் மீட்கப்படுகின்றன. குறிப்பாக, குழந்தைகள், அவர்களின் பாற்போச்சிகள். சிறுவர்கள் அவர்களின் விளையாட்டுப் பொருட்களுடன் எலும்புக்கூடுகள் மீட்கப் பட்டு வருகின்றன.

இவை போர்க்கால எலும்புக்கூடுகள் என மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். 2009 போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் 2010 ஆம் ஆண்டில் இருந்து மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படயில்தான் இன அழிப்பு விசாரணை என்று தமிழ்த்தரப்பு வலியுறுத்தி வருகின்றது. ஆனால் அதற்குரிய சா்வர்வதேச பொறி முறை என்ன என்ற விவாதங்கள் உரையாடல்கள் தொடர்கின்றன. இருந்தாலும் உனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலகட்டமிது. இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்பது மாத்திரமே ஈழத் தமிழர் தரப்பின் ஒருமித்த கோரிக்கையாக இருக்க வேண்டும். போர்க் குற்ற விசாரணை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை என்ற கோரிக்கைகள் தமிழர் தரப்பில் அவசியமில்லை. ஏனெனில், 1950 களில் இன அழிப்பு ஆரம்பிக்கிறது.

ஆயுதப் போராட்டம் என்பது இடையில் ஒரு முப்பது வருடங்கள் மாத்திரமே. அந்த முப்பது வருடங்களிலும் வடக்குக் கிழக்கில் இராணுவம் நடத்திய கொலைகள் சித்திரவதைகள் மற்றும் காணி அபகரிப்புகள், புத்தர் சிலை அமைத்தல் எல்லாமே தமிழ் இன அழிப்புத்தான்.

2009 இற்குப் பின்னர் போரில் வீடுகளை இழந்த மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட புதிய வீடுகள் அமைந்துள்ள வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள நினைவுக்கற்கள் கூட பௌத்த மரபுரிமை அடையாளங்களுடன் அமைந்துள்ளன.

ஆகவே, தமிழர் மரபுரிமைகள் மறைக்கப்பட்டு சிதைக்கப்பட்டு பௌத்த மரபுரிமை அடையாளங்கள் தமிழர் பிரதேசங்களில் நிலை நாட்டப்படுகின்றமையும் இன அழிப்புத்தான். 2016 ஆம் ஆண்டில் இருந்து தமிழ் வரலாற்று பாட நூல்களில் பௌத்த சமய வரலாறுகளும் சிங்களச் சொற்களும் புகுத்தப்பட்டுள்ளன.

2009 இற்குப் பின்னர் மகாவம்சம் ஆறு பிரிவுகளாக எழுதப் பட்டு தமிழ் மக்களின் மரபுரிமைகள் அடையாளங்கள் அனைத்தும் பௌத்த கலை கலாசாரமாக சித்தரிக்கப்பட்டுள்ளன. யாழ் பொது நூலகம் 1981 இல் தமி ழர்களினால் எரிக்கப்பட்டு சிங்கள மக்கள் மீது பழி சுமத்தப்பட்டுள்ளதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

ஆகவே, இவை எல்லாமே இன அழிப்புத்தான். இந்த ஆதாரங்களோடு ஜெனீவா மனித உரிமைச் சபையில் இன அழிப்புக் கோரிக்கை மாத்திரமே தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட வேண்டும். ஐ.நா. யுனெஸ்கோ விதிகளின் பிரகாரம் பாட நூல்களை மொழி பெயர்க்க முடியாது. அதுவும் ஓர் இனத்தின் வரலாற்றை மொழி பெயர்க்க முடியாது.

ஆனால், இந்த விடயங்கள் எதுவும் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் இதுவரை சுட்டிக்காட்டப்படவில்லை. இப் பின்னணியில்தான் தமிழ் இன அழிப்புக்கான சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறை (International Impartial and Independent Mechaninsm - IIIM) மிகப் பொருத்தமானது என அமெரிக்கச் சட்ட வல்லுனரான பேராசிரியர் பிரான்ஸிஸ் பொய்ல் (Francis Boyle) 2021 ஆம் ஆண்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

சிரிய நாட்டு விவகாரத்தில் 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்ட IIIM என்ற சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு ஒப்பான பொறிமுறையே இலங்கை விடயத்திலும் பொருத்தமானது எனவும் பிரான்ஸிஸ் பொய்ல் சுட்டிக்காட்டியிருந்தார். பிரான்ஸிஸ் பொய்ல் கூறியதன் பிரகாரமே இப் பொறிமுறை பற்றி 2021 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் நிபந்தனை விதித்திருந்தன. ஆனால் ஜெனீவாவுக்கு அனுப்பப் பட்ட அறிக்கையில் நான்காவது கோரிக்கையாகவே IIIM குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் ஒரு வருட காலத்துக்குள் இந்த IIIM என்ற இப் பொறிமுறை சாட்சியங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற மட்டுப்படுத்தல் ஒன்றை கஜேந்திரகுமார் அப்போது முன்வைத்திருந்தார். ஆனால் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படவில்லை. ஆகவே இப் பொறமுறை குறித்துத் தமிழ்த்தரப்புா் தெடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# செம்மணிப் புதைகுழி கிளறிய சில சிந்தனைகள்

யாழ் கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு செம்மணிப் புதைகுழி தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கை வருமாறு :

1996ம் ஆண்டு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி பரீட்சை முடிந்து செம்மணியூடாக வீடு திரும்பும் போது செம்மணியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டமையும் அவரைத் தேடிச் சென்ற அவரது தாயும் உறவுகளும் படுகொலை செய்யப்பட்டுஅங்கேபுதைக்கப்பட்டதும்பின்னர்இந் நிகழ்வுகள் வெளிவந்து குற்றவாளிகள் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச ஆகியோர் குற்றவாளிகளாகக் காணப் பட்டு 1998ம் ஆண்டு ராஜபக்சவிற்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழுங்கப்பட்டு பின்னர் 2015ம் ஆண்டுக்குப்பின் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டவை என்பன வரலாறுகள்.

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கின் பிரதான குற்றவாளியாகிய சோமரட்ண ராஜபக்ச கொடுத்த வாக்குமூலத்தில் மேலும் சில தமிழ் மக்கள் செம்மணியில் கொல்லப்பட்டு அங்கு புதைக்கப்பட்டிருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தும் அப்போது செம்மணிப்பகுதி ஒரு பாரிய மனிதப்புதைகுழியாக இருக்கலாம் என்ற சந்தேகம் இருந்தாலும் அதன்பின் அதுபற்றி எவரும் பெரிதாகப் பேசவில்லை. ஆயினும் சில மாதங்களுக்குமுன் செம்மணிப்பகுதியில் ஒரு தகனமேடைக்கெனத்துப்புரவுப்பணிகள்மேற்கொள்ளப்பட்டபோது, மனித உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

பின்னர் உத்தியோகபூர்வமாக அப்பகுதியில் நீதிமன்ற அனுசரணையுடன் தோண்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது மேலும் பல எலும்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற அகழ்வுப்பணிகள் தற்காலிகமாக 10.7.2025 நிறுத்தி வைக்கப்பட்டபோது ஏறக்குறைய 65 மனித உடற் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவை இன்னும் பகுப்பாய்வு செய்யப்படவில்லையாயினும் மேலெழுந்தவாரியாகப்பார்க்கும்போது அதிர்ச்சியூட்டுபவையாகவுள்ளன. அவற்றுள் சில சிறுமிகளுடையது. ஒரு இடத்தில் ஒரு சிறுவர்களது விளையாட்டுப் பொம்மை, மற்றும் பாடசாலைப் புத்தகப்பை, மற்றும் சிறுமியின் உடை, சில வளையல்கள் போன்ற பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

15.7.2025 அன்று இவ்வழக்குக்குப் பொறுப்பான நீதிவான் அ. ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்வின் போது பிரசன்னமாயிருந்த தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோம தேவாவும், சட்டவைத்திய அதிகாரி வைத்தியர் செல்லையா பிரணவனும் பிரசன்னமாயிருந்தனர். அப்போது தொல்லியல் பேராசிரியரும் சட்ட வைத்திய நிபுணரும் தமது இடைக்கால அறிக்கைகளில் இப் புதைகுழியில் உள்ள எலும்புக்கூடுகள் உள்ள இடம் ஒரு குற்றப்பிரதேசமாகவும், மனித உரிமை மீறல்கள் இடம் பெற்ற இடமாகவும் கருதப்படச் சான்றுகள் என்றும் குறிப்பாக 4-5 வயதுச்சிறுமியின் எலும்புக்கூடு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

இக்காலகட்டத்தில் கிருஷாந்தி கொல்லப்பட்டதற்கு (1996க்கு) முந்திய பிந்திய காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இராணுவ முகாம்களும் வீதிக்குவீதி சோதனைச் சாவடிகளும் இருந்தன. சர்வசாதாரணமாகக் கைதுகளும், கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போவதும் இடம்பெற்று வந்தன.

யாழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிறீதரன் இது பற்றிப் பாராளுமன்றத்தில் 2025 ஆனி ஆடி இடம் பெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் குறிப்பிட்டிருந்தார். ஆங்கிலத்தில் "tip of the iceberg" (நீரில் மிதக்கும் பனிப் பாறையின் வெளியே தெரியும் சிறிய பகுதி) என்று ஒரு சொற்றொடர் உண்டு, பாரிய பனிப்பாறைகள் கடலில் மிதந்துவரும் போது வெளியே கண்ணுக்குத்தெரியும்

சிறியதொரு பனிக்கட்டியை இது குறிக்கின்றது. ஆனால் அதைப்போல் ஏழு மடங்கு பெரிய பனிப்பாறை தண்ணிருக்குள் அமிழ்ந்திருப்பது வெளியே தெரியாது) இது போலத்தான் இதுவரை செம்மணி சிந்துபாத்திப்பகுதியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 65 மனித எலும்புக்கூடுகள் (பாடசாலை சிறுமிகளது உட்பட) சோமரட்ண ராஜபக்சவின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த எலும்புக்கூடுகள் இப்பகுதியில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட 600க்குக்குறையாத தமிழர்களின் எலும்புக்கூடுகளாயிலுக்கலாம் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இருக்க முடியாது என்ற முடிவுக்கு வரமுடியும்.

இதற்குமேலாக2024ம்ஆண்டுகுழாய்நீர் வசதி வழங்கச் சில அகழ்வு மேற்கொள்ளப்பட்ட கொக்குத் தொடுவாயில்கண்டெடுக்கப்பட்ட சூட்டுக்காயங்களுடன்கொல்லப்பட்டுப்புதைக்கப்பட்ட இறந்த இளைஞர், இளம் பெண்களுடைய எலும்புக்கூடுகள், மன்னார் பாலத்துக்கருகாமையில் "சதோச" வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டு இதுவரை முடிவு வெளிவராத எலும்புக்கூடுவிபரங்கள், திருக்கேதீஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் எல்லாவற்றையும் பார்க்கும் போது கண்டெடுக்கப்பட்ட எலும்பு கூடுகள் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களுள் 1% வீதமானவர்களது எலும்புக்கூடுகள் என்ற முடிவுக்கு செம்மணியில் வரலாம்

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு கமிஷனர் வோர்க்கர் டக் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்திற்கும் வந்திருந்தார். அப்போது "அணையா விளக்கு" நிகழ்வும் சிவில் சமூகங்கள் செயற்பாட்டாளர்கள் சரியான நேரத்தில் செம்மணிப்பகுதியில் ஏற்பாடு செய்த 3 நாள் கவன ஈர்ப்பு நிகழ்விலும் கலந்து கொண்டது வரவேற்கத்தக்கது. ஆயினும் இவரது கருத்துக்கள் விசாரணையில் சர்வதேச பங்களிப்பைச்சுட்டிக்காட்டாதிருப்பது பெரும் ஏமாற்றமே. 3000நாட்களைக்கடந்துவலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் போரின் பின் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே என்று கவன ஈர்ப்பை நடத்திக்கொண்டிருந்தார்கள். இந்த 3000 நாட்களில் கவனஈர்ப்பில் ஈடுபட்டவர்களுள் 200க்கு மேற்பட்டவர்கள் தமது உறவுகளைக் கானாது இறந்து விட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பலவிதமான வாக்குறுதிகளுடன் பதவிக்கு வந்து தொடர்ந்தும் புதுப்பித்த வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கும் தற்போதைய அரசின் செயற்பாடும் "பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை" என்று தான் உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இந்த அரசின் செயற்பாடு ஒரு அங்குலம் தானும் முன்னேறவில்லை.

நல்லிணக்கத்தைக்கொணர்வோம் என்று பதவிக்கு வந்த தற்போதைய அரசு தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினைசம்பந்தமாக அதன் செயற்பாடுகள் மந்த கதியிலேயே உள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பின் பின் உள்ள சில வீதிகள் திறக்கப்பட்டாலும் அவர்களது காணிகள் இன்னும் முறைப்படி விடுவிக்கப்படவில்லை. மறுபுறத்தில் கிழக்கில் தமிழரது பாரம்பரியக்காணிகள் பெரும்பான்மையினருக்குத்தாரைவார்க்கப்படுகின்றன. வெடுக்குநாறி, குருத்தூர், தையிட்டி ஆகிய இடங்களில் தமிழ் மக்களின் தொன்மை மிகு இடங்கள் பறிக்கப்பட்டமைக்குத் தீர்வு காணப்படவில்லை. பயங்கரவாதத்தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்பட்டபாடில்லை. 2009ம் ஆண்டு யுத்தம் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு முடிவுக்கு வந்த பின் போர்க்குற்றங்கள் (சரணடைந்தவர்களைக் கொல்வது உதாரணம்: இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றவர்கள்) பற்றிய பொறுப்புக்கூறல் இதுவரை இடம் பெறவில்லை.

செம்மணி, கொக்குத்தொடுவாய், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களில் உள்ள புதைகுழிகள் பற்றிய அகழ்வுக்கும் ஆய்வுக்கும் உள்நாட்டில் நிபுணத்துவம் இல்லையென்று தெரிந்தும் வெளிநாட்டு தலையீடுகளுக்கு அனுமதி மறுப்பு, போர்க்காலத்தில் இடம் பெற்ற படுகொலைகள் உதாரணம் நவாலி சென் பீற்றர் தேவாலய குண்டு வீச்சு, நாகர்கோவில் குண்டுவீச்சு,புனித ஜேம்ஸ் ஆலயக் குண்டுவீச்சு, மடுத் தேவாலய "ஷெல் வீச்சு, மூதூர் வெளிநாட்டு (Actio Fame) தொண்டு நிறுவன ஊழியர் படுகொலை, திருகோணமலையில் பரீட்சை எழுதிமுடித்திருந்த 5 மாணவர் படுகொலை போன்றவை எவற்றிலும் உள்நாட்டுப் பொறிமுறையில் ஒரு அங்குல முன்னேற்றமில்லை.

இதனால் தான் தமிழ் மக்கள் நல்லிணக்கம் ஏற்படவேண்டுமாயின் மேற்குறிப்பிட்ட சில விடயங்களிலாவது வெளிநாட்டு தலையீடு ஏற்பட்டிருக்க வேண்டும். சாத்வீரசேகர விமலவன்ச, விமல ரத்னதேரர் போன்றவர்களது இனவாதக்கருத்துக்களுக்கு இவ்வரசும் அடிபணிகிறது போலத் தென்படுகிறது. 2009ம் ஆண்டுக்கு முன் குறிப்பாக 30 ஆண்டுகாலம் நடந்த உக்கிரமான மேதல்களில் பல்லாயிரக்கணக்கில் பொது மக்கள் விமானக் குண்டு வீச்சுக்கள் மூலமும் தரையில் கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக் உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டு, கடலில் சாதாரண பயணிகள் கொல்லப்பட்டதாலும் (குமுதினிப் படுகொலை) ஆகியவை இனப்படுகொலை அல்லது இனச்சுத்திகரிப்புக்களின் வெளிப்பாடுகளே. அத்துடன் யாழ் நூலக எரிப்பு, பொது மக்களின் காணிகள் ஆக்கிரமிப்பு, ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் பௌத்த விகாரைகள் நிர்மாணம் எல்லாம் இன அழிப்பின் பல்வேறு பரிமாணங்களே.

அத்துடன் ஒவ்வொரு வருடமும் 2009ம் ஆண்டுக்குப்பின் யுத்த வெற்றி நாள் கொண்டாடப்பட்டு, கடற்படை, விமானப்படை, தரைப்படையினருக்கு யுத்தகால வீரதீரச்செயல்களுக்குப்பதவிஉயர்வுகளும், பதக்கங்களும் வழங்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்டவற்றுள் எந்த வீரதீரச் செயல்களுக்காக இப்பதக்கங்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்படுகின்றன? இது போன்ற துன்பியல் நிகழ்வுகள் இனி நிகழாது, நல்லிணக்கமே எமது குறிக்கோள் என்று பதவிக்கு வந்த இவ்வரசு இவ் வருட வெற்றி விழாவில் மேற்படி வீர தீரச்செயல்களுக்காக பதவி உயர்வுகளும் பதக்கங்களும் வழங்கியிருந்தது என்பது சுட்டிக்காட்டத்தக்கது என இவ்வறிக்கை அமைகின்றது.

அன்பின் மகிழ்வு

# அதிகரிக்கும் 31 விவாகரத்துக்கள்





அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

**உடன்படிக்கை, ஒற்றுமை, மற்றும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட அன்புக்கான அழைப்பு**

இன்றைய உலகில், தனிமை மற்றும் உடனடித் திருப்தி ஆகியவை மிக முக்கியமான மதிப்புகளாகப் பேணப்படுகின்றன. பலர் வாழ்க்கையின் அர்த்தத்தை விரைவான மகிழ்ச்சி மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தின் அடிப்படையில் தான் தேடுகிறார்கள். சமூகமும் ஊடகங்களும், "உன்னுடைய பாதையை நீயே தேர்வு செய்," "உன்னைக் காயப்படுத்துவதை விலக்கு," "உனக்குப் பிடித்ததைச் செய்" போன்ற செய்திகளை இடையறாது வழங்குகின்றன. இதனால், உறவுகளும், திருமணமும் கூட ஒரு உபயோகப் பொருளாகவே பார்க்கப்படுகின்றன - பயனுள்ளவரை வைத்துக் கொண்டு, சுவாலாக மாறும் போது விலக்கப்படும் ஒன்றாக.

இந்தப் பார்வை, உறவுகளில் உள்ள அர்ப்பணிப்பு, பொறுப்பு, தியாகம் மற்றும் நீடித்த அன்பின் அழகை மறைத்துவிடுகிறது. தற்காலிக மகிழ்ச்சி என்பதே நோக்கமாகும் நிலையில், நிலைத்த உறவுகள் அரியவையாக மாறுகின்றன. இந்நிலையில், திருமணமும், குடும்பமும், உண்டாக்கப்பாட்ட ஒப்பந்தங்கள் என்பதை விட, கடவுள் நியமித்த உடன்படிக்கைகளாக நாம் மீண்டும் கண்டறிய வேண்டியுள்ளது. திருமணம், பலரது பார்வையில், ஒரு "ஒப்பந்தமாக" மட்டுமே கருதப்படுகிறது. மகிழ்ச்சி குறையும்போது அல்லது சிக்கல்கள் தோன்றும்போது முடிக்கக்கூடியது ஒப்பந்தம். ஆனால் கிறிஸ்தவ பார்வையில், திருமணம் என்பது சட்ட ஒப்பந்தமாக மட்டும் அல்ல. அது கடவுளால் நிறுவப்பட்ட ஒரு உடன்படிக்கை, புனித பிணைப்பு. இது கிறிஸ்துவின் திருச்சபையை நேசிக்கும் அன் பின் பிரதிபலிப்பு: எனவேதான் "கடவுள் இணைத்ததை, மனிதர் பிரிக்காதிருக்கட்டும்" (மாற்கு 10:9) என்று திருவிவிலியம் வலியுறுத்துகின்றது. எனவே திருமணம் என்பது ஒரு தெய்வீக அழைப்பு. ஆனால் இன்று, விவாகரத்தை ஒரு எளிதான தீர்வாகப் பார்க்கும் நிலை உருவாகி விட்டது. அதன் ஆன்மீக, உணர்ச்சி, சமூக மற்றும் திருச்சபை சார்ந்த தாக்கங்கள், ஆழமாகவும் துயரமிக்கவையாகவும் இருக்கின்றன.

**திருமணம்: அருளின் அருட்சாதனம்**

திருச்சபை கற்பிப்பது போல, திருமணம் என்பது ஒரு அருட்சாதனம் கடவுளின் அருளின் வெளிப்பாடு. வத்திக்கான் இரண்டாம் சங்க Gaudium et Spes ஆவணத்தில் இது இவ்வாறு கூறப்படுகிறது: "திருமண வாழ்க்கையும் அன்பின் நெருக்கமான பிணைப்பும் படைப்பாளரால் நிறுவப்பட்டவை அவற்றுக்குரிய சட்டங்களை அவரே வழங்கினார்... கடவுளே திருமணத்தின் ஆசிரியர்." (GS 48). இதன் அர்த்தம் என்னவென்றால், தம்பதிகள் திருமண சவால்களைத் தனியாக எதிர்கொள்ள வேண்டியதில்லை. கடவுளின் அருள் அவர்களுடன் எப்போதும் இருக்கிறது. வலிமையற்ற நேரங்களில், அருள் அவர்களுக்கு வலிமை தருகிறது. விரக்தி வந்து சேரும்போது, அது நம்பிக்கையைத் தூண்டுகிறது. அன்பு சோர்வடையும்போது, அது புதுப்பிக்கின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் Amoris Laetitia திருமடலில் இவ்வாறு எழுதுகிறார்: "ஒவ்வொரு திருமணமும் ஒரு மீட்பு வரலாறு: அது பல வீனமான தொடக்கத்திலிருந்து, கடவுளின் பரிசாகவும், தாராளமான பதிலாகவும் வளர்ந்து, காலப்போக்கில் விலைமதிப்பற்றதாகவும் நிலைத்ததாகவும் மாறுகிறது." (AL 221)

**திருமணத்தின் மையம் சிலுவையில்**

யோவான் 2:1-11-இல் இயேசு தனது முதல் அற்புதத்தை ஒரு திருமணத்தில் நிகழ்த்துகிறார். இரசம் முடிந்த போது, மரியாள் அவரிடம் திரும்பினார், இயேசு மகிழ்ச்சியை மீட்டளித்தார். அதுபோல, நெருக்கடி நேரங்களில், தம்பதிகள் ஒருவரையொருவர் விட்டு விலகாமல், கிறிஸ்துவை நோக்கிச் செல்ல வேண்டும். திருமணம் என்பது வெறும் இனிமையான நிகழ்வுகளால் மட்டும் அல்ல, சிலுவையின் அனுபவத்தாலும் உயிருட்டப் படுகின்றது. அன்பு என்பது ஒரு உணர்வு மட்டும் அல்ல. அது சுயதியாகத்தின் பயணம். புனித பவுல் எபேசியருக்கு எழுதுகிறார்: "கணவர்களே, கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியதுபோல நீங்களும் உங்கள் மனைவியாரிடம் அன்பு செலுத்துங்கள். (எபே சியர் 5:25). இவ்வகை அன்பையே புனித தெரேசின் பெற்றோர் புனித லூயிஸ் மார்ட்டின் தம்பதிகள் தங்கள் வாழ்க்கையில் மேற் கொண்டனர். அவர்கள் ஜெபமும், பொறுமையும், பகிர்வும் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்களின் வீடு, அருளின் சரணாலயமாக இருந்தது.

**காயங்களுக்குள் இரக்கம்**

விவாகரத்து இன்று பலர் வாழ்வில் மனப் புண்கள், தனிமை மற்றும் குற்ற உணர்வு என்பவற்றை ஏற்படுத்துகின்றது. திருச்சபை ஒரு தீர்ப்பளிப்பவராக இல்லாமல், இரக்கத்துடன் நடந்து கொள்கின்றது. சில சந்தர்ப்பங்களில், பாதுகாப்புக்காகப் பிரிவுகள் தேவைப்படலாம். ஆனால் அதே நேரத்தில், குணப்படுத்தலுக்கும் நல்லிணக்கத்திற்குமான வாய்ப்புகளும் எப்போதும் உள்ளது.


திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் Familiaris Consortio திருமடல் கூறுகிறார்: "திருச்சபை, விவாகரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செபிக்கிறது மற்றும் அவர்களுடன் பயணிக்கிறது. மனமாற்றத்திற்கும் குணப்படுத்துதலுக்குமான பயணத்திற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது." (FC 84) திருச்சபை ஒரு நீதிமன்ற அறை அல்ல. அது புண்பட்டவர்களுக்கான ஒரு கள மருத்துவமனை. இந்த வேளையில் குடும்ப உறவுகளை வலுப்படுத்த தேவையான ஆன்மீக நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்

1. தம்பதிகள் தினமும் கரம் கோர்த்து ஒன்றாகச் சில நிமிடங்கள் செபிக்கவேண்டும்.
2. தினமும் திருமணத்தில் அன்பின் பொருளை பெருமையை விளக்கும் பகுதிகளான 1 கொரிந்தியர் 13, எபேசியர் 5, சங்கீதம் 128 போன்ற பகுதிகள் பகுதிளை தம்பதிகள் வாசித்து வாழ்வாக்குதல்
3. திருப்பலி மற்றும் நற்கருணை சந்திப்பில் ஒன்றாக பங்கற்றல்.
4. தேவையான நேரங்களில் திறந்த உரையாடல் வழியாக வாழ்வில் ஏற்பட்ட காயங்களைக் குணப்படுத்த முனைதல்
5. திருக்குடும்பத்தை முன்மாதிரியாகக் கொண்டு மரியாள், யோசேப்பு மற்றும் இயேசுவின் வாழ்வைப்பின்பற்றி வாழ்தல்

**நிலைத்த அன்பிற்கான அழைப்பு**

இன்றைய சமூகம் உறவுகளை விரைவில் கைவிடச் சொல்கிறது. ஆனால் உண்மையான திருமணங்கள் ஒளிக்கோடுகள் போன்றவை. தம்பதிகள் சண்டைக்கு பிறகு ஒருவரை ஒருவர் மன்னிக்கும்போது, அவரவர் கொடுத்த திருமண வாக்குறுதிகளை நினைவுபடுத்திக் கொள்ளும்போது, அவர்கள் கிறிஸ்துவின் அன்பின் சின்னங்களாக மாறுகிறார்கள். புனித யோவான் கிறிசோஸ்டம் எழுதியபடி: "திருமணம் என்பது இன்பத்திற்காக அல்ல ஆனால் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்வதற்கும், நல்லொழுக்கத்தில் பரஸ்பர ஆதரவிற்கும், புனிதமான சூழலில் குழந்தைகளை வளர்க்கும் நோக்கத்திற்குமானது." அனைத்துத் தம்பதிகளும் தங்கள் அன்பு கடவுளின் பரிசு என்பதனை உணர வேண்டும். தங்கள் உறவின் நிலைத்தன்மை தலைமுறைகளை ஆசீர்வதிக்கும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். என்றும் தங்கள் நடுவில் கடவுள் இருக்கிறார் என்பதனை உணர்ந்து ஒன்றாக நிலைத்திருக்க வேண்டும்.

## உலக நீதி நாள்



படைப்பில் உயர்ந்தது என்று பெருமைப்படும் மனித இனம் மனிதத் தன்மையிலிருந்து சறுக்கி விடாமல் மேம்படுத்தும் விழுமியங்களில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டே செல்கின்றதா? என்றால் மனித வரலாறு "இல்லை" என்று தானே சொல்லும் எவ்வேளையிலும் அநீதி எனும் இருளை தக்க வைக்கும் அளவுக்கு இச் சமுதாயமானது செயற்பட்டு வருகின்றது. எங்கு பார்த்தாலும் மனிதர்களுக்கெதிரான தீமைகள் பலமாகின்றன. அட்டூழியங்கள் மலிந்து கிடக்கின்றன. இதனால் எம் நாட்டில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான 2019 இல் சதி செய்து செய்யப்பட்ட உயிர்த்த ஞாயிறன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதலும் 2009 இல் முள்ளிவாய்க்காலி நடைபெற்ற இனப்படுகொலை அழிப்புமாக எம் மக்கள் எத்தனையோ மக்களை இழந்த நிலையில் எம் மத்தியில் ஆறாத வடுக்காளகச் செல்கின்ற நிலையிலும் இப்படிப்பட்ட கயவர்கள் சாதாரண மக்களோடு மக்களாகத் திரிந்து போலியாக நல்லவர்களாகக் காட்டி எங்களைச் சோதிக்கும் போது நம் இரத்தம் கொதித்து உறைகிறது.

இச் செயல்களின் ஊடாக ஏன் துன்புறும் மக்களை யாரும் காப்பாற்றவில்லை? மேலும் படித்துப் பதவியில் இருக்கும் மனிதர்கள் ஏன் இதைத் தட்டிக் கேட்பதுமில்லை. உலக நீதி நாள் நமக்கு எதை நினைவுறுத்துகிறது?

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அரசாங்கம் அந்த நாட்டின் மக்களுடைய நலனுக்காக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகத் திட்டங்கள் தீட்டி அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்வதோடு, மக்களின் பல்வேறு வகைப்பட்ட முன்னேற்றங்களில் கவனம் செலுத்த வேண்டும். அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் பிற நாடுகளைவிட முன்னிற்க வேண்டும். சட்டங்களுக்கு அடிப்படையான நீதியை நிலை நாட்ட வேண்டும். நாடுகளிடமிருந்து ஆபத்து வராமல் பாதுகாக்க அரசு முன்னின்று உழைக்க வேண்டும்.

எனினும் இவ்வளவு மேன்மையான கடமைகளை ஆற்றுவதற்கென்று சமயங்களும், ஊடகங்களும், படித்தவர்களும் மக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப வேண்டும். நீதியை நழுவ விடாது உண்மைக்காகப் போராட வேண்டும்.

உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக (மத். 22:39)

உலக சமாதானத்திற்காக, உலக நீதிக்காக எனும் திருத்தந்தை பிரான்சிஸின் வேண்டுகோளை மனதில் மதித்து நடப்போம்.

மேரிதாஸ் ஜெனதாஸ்
புனித மடுத்தீனார் குருமடம்

# A.I.

# மனித நுண்ணறிவை மிஞ்சும் நிலையில்

நாம் வாழும் இப்புவியின் எதிர் காலம் யார் கையிலிருக்கப் போகிறது? "ட்ரான்செண்டென்ஸ்" என்ற முற்றிய நிலை ஆன்மாவைச் சிந்திக்கும் ஆன் மீக வாதிகள், மனோதத்துவ வல்லுனர் கள், விஞ்ஞானிகள் மத்தியில் அவர்க-ளுடைய அடிப்படை நம்பிக்கையை அசைப்பதாகக்கூட இருக்கலாம். எல்லா வற்றிற்கும்மேல் அபார நுண்ணறிவின் செயற்பாடுகளுக்கு யார் பொறுப்பேற் பது? கனவு நினைவாகி, நினைவு நிகழ்வாகிறதா?

உலகில் 1700 விஞ்ஞானிகள் சேர்ந்து AGI (Artificial General Intelli-gence) சாத்தியப்படுமா? என்று ஆராய்ந்தனர். அவர்களில் பெரும் பாலோருக்குக் கிடைத்த பதில் "ஆம்" என்பதாகும். "ஒருமைத் தொழில்நுட்பம் எப்போது நிகழும்?" என்ற கேள்வி பலர் மனத்திலும் உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அளவுகோல் இல்லை. அது சீராகவும் அல்லது சூடுபிடித்து, முடுக்கிவிட்ட வேகமாக விரிவடையும் தன்மையும் பெற்றது.

1965-ஆம் ஆண்டு இன் டெல்லின் இணை நிறுவுனர் கார்டன் மூர் என்பவர், கணினியின் சக்தி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரட்டிப்பாகும் என்று கணித்தார். இது கடந்த ஐம்பது ஆண்டுகளில் நிகழ்ந்தது. அமெரிக்கக் கணினி விஞ்ஞானியும், தொழில் நிபுணருமான ஏர் கர்ஸ்வெல் ஏ.ஐ.- யில் ஆதிக்கம் பதித்தவர், 2005ம் ஆண்டு இவர் "ஒருமை அருகாமையி லிருக்கிறது" என்ற நூலை எழுதினார். அப்போது ஏ.ஐ.பற்றி யாருக்கும் அவ்வ-ளவு தெரியாது.

அந்நூலில், "கணினியானது மனித நுண்ணறிவின் தரத்தை 2029-ஆம் ஆண்டுகளுக்குள் அடைந்துவிடும்" என்றும், அது ஒன்றாகி அபார மனித னாக, ஏறக்குறைய 2045-ஆம் ஆண்-டில் உருவெடுப்பதை "ஒருமை" என்று குறிப்பிட்டிருக்கிறார் (Computers would reach human level intelligence by 2029 and merge with computers and become super humans around 2045 is called singularity). ஏ.ஜி.ஐ. என்பது, நாம் எப்படி வேலை செய்கிறோம்? வாழ்கிறோம்? நினைக்கிறோம்? என்ற மனிதமூளையின் செயலாற்றலைக் கொண்ட தொழில்நுட்பம். இந்த இலக்கை நோக்கிச் செல்லும் ஆராய்ச்சி யின் வேகம், நாம் ஏ.ஜி.ஐ.-யின் எல்லைக்குள் நுழைந்து விட்ட தையும், ஏ.எஸ்.ஐ. (Artificial Super fo auial Intelligence-ASI) வை அடைவது எட்டிய தூரத்திலிருப்பதையும் காட்டு கிறதாக உள்ளது. ஏ.ஜி.ஐ. என்பது உடனே வெளிப்படுவதற்கான அதன் அறிகுறிகளையும் காணமுடிகிறது.

2024-ஆம் ஆண்டு செப்ரெம்பரில் ஆல்ட்மேன், 'The Intelligent Age' என்ற நூலில், "ஏ.ஜி.ஐ. என்பது மனித வர்க்கத்திற்குக் கிடைக்கும் கருவியா யில்லாமல், மனித வரலாற்றை உரு வாக்கும் புதிய சகாப்தமாயிருக்கும்" என்று கூறியிருக்கிறார்.

ஓர் இயந்திரம் தானே கற்று, புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் திறனைப் பெற்றுவிட்டால், அது அதிக ஆற்றலை அடைவதென்பது வெகு தொலைவில் இல்லை என்பதை வெளிப் படுத்துவதாக ஏ.ஜி.ஐ. பார்க்கப் படுகிறது. இதுவரை ஏ.ஐ. அமைப் புகள் எழுது வது, நகல் எடுப்பது, நோய் களை அறிவது, போக்குவரத்தை விரிவுபடுத்துவது என்ற செயலாற்றல் களைக் கணினியின் குறுகிய எல்லைத் திறனில் அமைந்திருந்தன. ஆனால், ஏ.ஜி.ஐ.-யின் செயலாற்றல். மாற்றிய மைத்துக்கொள்ளுதல், காரணமறி-தல், பல்வகைச் சிக்கல்களைத் தீர்த்தல் என்ற திறன் களைப் பெற்றிருக்கும். இதற்கு உதாரணமாக. பேசும் இயந்-திரங்களைக் கூறலாம்.

நுண்ணறிவு என்பது இதுவரை மனிதனுக்கே உரிய தனித்துவப் பண்பாக மதிக்கப்படுகிறது. இந் நிலையில் ஏ.ஜி.ஐ. என்ற இயந்திரச் செயலியை நம் வாழ்க்கையின் அங்கமாக அது கருவியாகவோ அல்லது பங்காளியாக அல்லது எதிரியாக எவ்வாறு இணைக்கப் போகிறோமோ அதைப் பொறுத்தே நம் கலாசாரத்தை, அடையாளத்தை. முக்கியத் துவத்தை அது பிரதிபலிக்குமென்பது இப்போது நம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாயுமிருக்கிறது. ஏ.ஜி.ஐ. ன் பின் ஏன் செல்லவேண்டும்?

மனிதனின் திறனைவிட கணினியின் அறிவாற்றல் இயந்திரங்கள்" இப்போதைக்கு இல்லை என்றாலும், சில ஆராய்ச்சியாளர்கள் மொழி பேசும் இயந்திரங்கள் அப்படி மேம்பட்ட திறனைப் பெற்று உருவாகுவதற்கான சாத்தியக் கூறுகளை வெளிக் காட்டுவதாக நம்புகின்றனர்.

இன்று வளர்ச்சியடைந்த தொழில் நுட்பங்களான ஏ.ஐ.-யும் கற்கும் இயந்திரமும் இணைந்து- உதாரணமாக, ஒருவர் நோபல் பரிசைப் பெற எடுத்துக்கொள்ளும் முயற்சிக்குச் சமமான உழைப்பை ஒரு சில நிமிடங்களில் உருவாக்கிச் சாதிக்கும் திறனைப் பெற்றிருப்ப-தாகக் கூறப்படுவது இயந்திரச் செயலாற்றலின் வீரியத்தைக் காட்டுகிறது. ஏ.ஜி.ஐ.ன் பின் செல்வ தென்பது ஒரு குருட்டுத்தனமான முயற்சி என்று தோன்றினாலும், இதற்கான சில காரணங்க-ளும் சொல்லப்படுகின்றது.



◆ மனித அறிவாற்றல் பல ஆயிரம் ஆண்டுகள் நிலையானதாகக் கருதப்படுகிறது. இந்நிலை யில், புரிந்துகொள்ளும் திறனை இயந்திரங் களுடன் இணைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இத்திசையில் எலான்மஸ்க் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. இயந் திரச் செயலாற்றல் என்பது அல்கோரிதம்கள் ஆய்வுத் திறன் மற்றும் நினைவறை ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. இவற்றில், ஆய்வுத்திறனும் நினைவறையும் அதிவேகமாக வளர்ந்து வருகின்றன. இயந்-திரங் களின் ஆய்வுத் திறனுக்கும் நினை வறைக்கும் ஏற்ற அல்கோரிதம்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பது நாம் ஏதோ ஒன்றை நெருங்கிவிட்டோம் என்பதாகத் தெரிகிறது.

**மனிதச் செயலாற்றல் நிலைத்துவிட்டது. இயந்திரச் செயலாற்றல் வளர்ந்து கொண்டே போகிறதா?**

மனிதனின் செயலாற்றல் நிலைத்து விட்ட நிலையில், இயந்திரச் செயலாற்றல் தொடர்ந்து வளர்ந்து கொண்டே போவதால், இயந்திரங்களுக்குத் தகுந்த வரையறைகள் இல்லையென்றால். அவை மனிதனை மிஞ்சும் தருணம் எப்போது வேண்டுமானாலும் நிகழலாம். இதுவரை அந்த எல்லையை நாம் எதிர் கொள்ளவில்லை என்பது தான் இன்றைய நிலை.

ஒருவேளை இயந்திரங்கள் இப்போது ஊமையாக இருப்பதாகத் தோன்றலாம் ஆனால், அவை மிக திறனுடன் மிக விரைவில் வளரும் தன்மையைப் பெறும் நிலை எப்போது என்பதுதான் கேள்வி.

◆ 2022-ஆம் ஆண்டு இத்துறை சார்ந்த 738 வல்லுனர்கள் நடத்திய ஆய்வில், இது 2059-க்குள் சாத்தியப்பட வாய்ப்புகளிருப்பதாக அறியப்பட்டது.

◆ டெஸ்லா மற்றும் "ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனங் களின் தலைவரான எலான் மஸ்க் என்பவர் இப்போதுள்ள ஆராய்ச்சியின் வேகத்தில் 2030-க்குள் அபார மனிதச் செயலாற்றலை ஏ.ஐ. பெற்றுவிடும். இத்தொழில்நுட்பம் மனித இன அழிவிற்கு வழிவகுக்கும், அடுத்து என்ன நடக்கும் என்று கணிக்க இயலாது. இதனால் இருண்ட எதிர்காலம் என்றில்லை. ஆனால், ஏ.ஐ.-யின் வேகமான வளர்ச்சியை ஒளிமய-மான திசையில் எடுத்துச் செல்ல முயல்வதா-கவும் கூறுகிறார்.

ஏ.ஐ.-யின் பிதா என்றழைக்கப்படும் ஜியாப்ரே ஹின்டன் என்பவர் 2024-ஆம் ஆண்டின் இறுதியில் BBC-4 நிறுவனத்திற்குக் கொடுத்த பேட்டியில், ஏ.ஐ.-யினால் இன்னும் 30 ஆண்டுகளில் மனித வர்க்கத்தை அழிக் கும் சூழல் உருவாகலாம் என்கிறார். 2024-ஆம் ஆண்டின் பௌதிக நோபல் பரிசைப் பெற்ற இவர், 10-20% இது நிகழ வாய்ப்பிருப்பதாகக் கருதுகிறார். எலான் மஸ்க், ஹின்டனின் கூற்றுடன் உடன்படுவதாகவும் கூறுகிறார். தேவைப்படுகி றதோ இல் லையோ, தொழில்நுட்ப வளர்ச்சியை நிறுத்-தியதாக இதுவரை சரித்திர மில்லை. ஏ.ஐ.-யின் எதிர்காலம் பாதி எழுதப்பட்டு விட்டது. மனிதனும் இயந்திரமும சுமூகமாக இணைந்து இயங்குவதும், அப்படியான எதிர்காலம் நம் அனைவரின் முன்னோக்கப் பார்வையிலும் பொறுப்பிலும், உலக-ளாவிய ஒத்துழைப்பிலும் இருக்கிறது.

**பயன்கள்**

"ஒருமை"யின் மனிதரைவிட, வெகுவேகச் செயலாற்றலினால் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறிப் பாக, மருத்துவம், எரிசக்தி, விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளில் பல நன்மைகள் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. உலகில் "ரோபோடிக்ஸ்" தொழில்நுட்பம் வாழ்க்கையின் அடிப் படைத் தேவைகளான பொருட்கள் மற்றும் சேவைப் பிரிவில் செலவை வெகுவாகக் குறைத்து மக்களுக்கு உதவும் என்று எலான் மஸ்க் கூறுகிறார்.

ரே கர்ஸ்வில் என்ற அமெரிக்க விஞ்ஞானி, "இந்தத் தொழில் நுட்பம் எதிர்காலத்தில் செல்வந்தர்களுக்கு மட்டும் கிடைக்குமென்று நினைக்க-வேண்டாம் உதாரணமாக, கைப் பேசி ஆரம்ப நாட்களில் விலை யின் காரணமாகச் சிலரிடமேயிருந்தது. இப்போது யாவரும் பயன்பெறும்படி யாகக் கிடைப்பது தொழில் நுட்பங் கள் அனைத்து மக்களும் நலன் பெற அமைந்திருக்கிறது" என்று கூறுகிறார். ஒரு சில வல்லுநர்கள் இதனை வணிக நோக்குடன் ஏ.ஐ.- யின் விளம்பரத்திற்காகவும் பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

ஏ.ஐ. இணையத்தளம் செய்தி அனுப்புவதில் செலவினை வெகுவாகக் குறைத்திருப்பதுபோன்று அறிவுத் திறனாய்வதில் செலவினைக் குறைக் கும் என்றும் கூறப்படுகிறது. நன்மை, தீமைகளிருக்க, ஐசக் அசிமோவின் மூன்று ரோபோ விதிகளை நினைவுகூர வேண்டியுள்ளோம். ஒன்று, ரோபோக் கள் மனிதருக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் இரண்டு, மனிதரின் கட்ட ளைக்கு அடங்கவேண்டும், கெடுதல் விளைவிக்கும் கட்ட ளையைத் தவிர்த்து மூன்று, மேலிரண்டு விதிகளோடு தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

> நுண்ணறிவு என்பது இதுவரை மனிதனுக்கே உரிய தனித்துவப் பண்பாக மதிக்கப்படுகிறது. இங்நிலையில் ஏ.ஜி.ஐ. என்ற இயந்திரச் செயலியை நம் வாழ்க்கையின் அங்கமாக அது கருவியாகவோ அல்லது பங்காளியாக அல்லது எதிரியாக எவ்வாறு இணைக்கப்போகிறோமோ அதைப் பொறுத்தே நம் கலாசாரத்தை, அடையாளத்தை, முக்கியத்துவத்தை அது பிரதிபலிக்குமெஎ்பது இப்போது நம் கற்பனைக்கு அப்பாற்பட்டதாயுமிருக்கிறது

# மாமன்ற இறுதி ஆவணத்தின் பார்வையில் கூட்டொருங்கியக்கத் திருஅவையில் பெண்களின் பங்களிப்பு



இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, அக்டோபர் 2022 தொடக்கம் அக்டோபர் 2025-வரை நாம் இணைந்து பயணித்த கூட்டொருங்கியக்கப் பயணம் நமக்கு உணர்த்திய தலையாய பாடம் என்ன? எதிர் வரும் மூன்றாவது ஆயிரமாண்டில் திரு அவையின் வாழ்வியல், அடையாளம், மற்றும் மறைப்பணி அனைத் திற்கும் அடித்தளமாக அமைவது கூட்டொருங்கி யக்கமே. ஆனால், ஒருங்கியக்கத் திரு அவை என்றால் என்ன? இறைவன் தம் திரு அவைக்கு விரும்புவதற்கு கூட்டொருங்கிய திரு அவை Synodal Church-I ஆயர்கள் மாமன்றத்தின் இறுதி அறிக்கை ஓர் அழகான உருவகத்தைப் பயன்படுத்துகிறது. அறிக்கையின் பகுதி 1 எண் 42 குறிப்பிடுகிறது. கூட்டொருங்கியக்கத்திருஅவை என்பது பல்வேறு இசைக்கலைஞர்கள் ஒன்றாக இணைந்து படைக்கும் இன்னிசையைப் போன்றது. வெவ்வேறு தனித்தன்மைகளைக் கொண்ட இசைக்கருவிகளும், வேறுபட்ட குரல் வளங்களைக் கொண்ட இசைக் கலைஞர்களும் தங்கள் தனித்தன்மை மாறாமல் ஒன்றாக இணைந்து செவிக்கு இனிமையான இசையைப் படைக் கின்றனர்.

அதுபோலவே, பல்வேறு இயல்புகள், கருத்தியல்கள், தனித்துவங்கள். வாழ்வுமுறைகளைக் கொண்டோர் இணைந்து உருவாக்குவதே கூட்டொருங்கியக்கத் திருஅவை. A synodal Church is like an orchestra, where women are not just accompanists but lead as conductors, composers, and first violinists in God's symphony of grace. தனித் தன்மையும் ஒற்றுமையும் இணைந்த இந்த ஒருங்கியக்கத் திருஅவையின் கனவு நிதர்சனமாக வேண்டுமெனில் திரு அவையில் ஒரு பாதியாகத் திகழும் பெண்களின் குரலும் பங்களிப்பும் திரு அவையின் வாழ்வியலில் அடையாளப்படுத்தப்படவேண்டும். தமிழ்நாடு ஆயர்கள் பேரவையின் கூட்டம் இந்த முக்கியமான காலத்தேவையை முன்னிறுத்துகின்றது.

பெண்களின் பங்களிப்பைக் குறித்த சிந்தனைக்கு ஆயர்களின் மாமன்றத்தின் மிகச்சிறந்த பங்களிப்பு எது என்ற கேள்வியோடு தொடங்க விரும்புகின்றேன். The Synod's final document stands out for its honest acknowledgment of the Church's past failure to recognize women's dignity and significance. பெண்களின் மகத்துவத்தையும் பங்களிப்பையும் தகுந்த முறையில் திரு அவை ஊக்குவிக்கவில்லை என்ற ஒப்புதலே என்னைப் பொறுத்தவரை இந்த ஆவணத்தின் மிகச்சிறந்த பங்களிப்பு. ஆவணத்தின் முன்னுரை எண்கள் 6 மற்றும் 16 ஒப்புக்கொள்வதுபோல, பெண்களின் சவால்களையும், அவர்களது கனவுகளையும் முன்னிறுத்த நாம் தவறியிருக்கின்றோம்.

The document acknowledges the Church's "sinful realities"; ignoring women's charisms, limiting their roles, and the widespread pain of exclusion. பெண்கள் நூற்றாண்டுகளாக அனுபவிக்கும் புறக்கணிப்பின் வலி, திரு அவையில் தலைமைத்துவம் மற்றும் உரிமைக்கான தேடல், பெண்களது திறமைகள் கொடைகள் மற்றும் இறையழைத்தலின் மாண்பு ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவது கூட்டொருங்கியக்கத் திரு அவையின் தலையாயக் கடமை என்கிறது ஆவணம். இந்தக் கடமையை நிறைவேற்ற நமக்குத் தேவைப்படுவது ஒருங்கியக்க மனமாற்றம். The synodal journey requires conversion (Introduction, 6). We must dismantle systems that silence women's voices and diminish their gifts. The Synod moves beyond words, proposing a synodal feminist approach. மன்றத்தின் ஆவணம் கூட்டொருங்கியக்கப் பெண்ணியல் சிந்தனையை முன்வைக் கின்றது. இன்று பெண்ணியல் சிந்தனை என்பது கத் தோலிக்க நம்பிக்கைக்கு முரணானது என்னும் பொதுவான விமர்சனத்தை நாம் காணகின் றோம். குறிப்பாக, ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில், பெண்ணியம் திரு அவையின் எதிர்காலத்திற்கு ஆபத்தானது என்று எச்சரிக்கும் குரல்களும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஏன் இந்த நிலைமை? பெண்ணியல் சிந்தனை என்பது உரிமைக் கான போராட்டம் என்ற உண்மையை மறந்து வெறும் கருத்தியல் மற்றும் அரசியல் சார்ந்த விவாதப் பொருளாகச் சுருங்கிவிட்டதே இதற்குக் காரணம். ஆயர்களின் மாமன்றம் முன்னிறுத்தும் பெண்ணியல் சிந்தனை என் பது சித்தாந்தங்களை மையமாகக் கொண்டது அல்ல. மாறாக, நமது நம்பிக்கையிலும் மறைப் பணியிலும் வேரூன்றிய தேடல்.

The Synod's vision for women rejects secular ideologies, grounding its feminist approach in faith and pastoral urgency. மாமன்றம் முன்னிறுத்தும் பெண்ணி யல் சிந்தனை நமது கூட்டொருங்கியக்கத் திரு அவையின் கனவை நோக்கித் தொடுக்கும் கேள்விகள் இவை: கிறிஸ்துவின் உடலாகிய திரு அவையில் பெண்களின் விடுதலை, மாண்பு மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றை நடைமுறையில் வளர்ப்பது எவ்வாறு? இன்று திரு அவையில் பெண்கள் அனுபவிக்கும் சவால்கள். அநீதி மற்றும் புறக்கணிப்புக் கட்டமைப்புகளை மாற்றுவது எவ்வாறு? திரு அவையிலும் சமூகத்தி லும் பெண்கள் தங்கள் சுய மரியாதையை, உரிமைகளை, பங்களிப்பைத் தாங்களாகவே உறுதிப்படுத்துவது எவ்வாறு? இந்தக் கேள்விகளுக்கு நாம் பதில் தேடப்போவது எங்கு? கருத் தியல் மோதல்களில் அல்ல. மாறாக, நற்செய்தியின் வழிகாட்டு தலில். The vision of a synodal inclusive church is not rooted in external ideologies but the Gospel.

எனது கருத்தைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். திரு அவை தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. இன்றைய பெண்ணியல் சார்ந்த கருத்துச் சிந்தனைக்கு நமது செவிகளை மூடிக்கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. மாறாக, நமது நம்பிக்கையிலும் வரலாற்றிலும் களப்பணியிலும் வேரூன்றிய ஒரு மாற்றுப் பெண்ணியல் சிந்தனையை இந்தச் சமூகத்திற்கு முன்வைப்பது நமது கடமை என்பதே நமது வாதம். இன்றைக்குப் பெண்ணியம் என்ற போர்வையில் கருச்சிதைவை நியாய மாக்கி, பெண்களின் தனித்துவத்தைப் புறக் கணித்து, குடும்பத்தின் மாண்பை மறுதலித்து, ஆண்-பெண் உறவை அதிகாரத்திற்கான போராட்டமாக (Power-struggle) சித்தரிக்கும் சிந்தனைகளுக்கு மாற்றாக நாம் வழங்கப்போகும் கூட்டொருங்கியக்கத் திரு அவையின் மாற்றுப் பெண்ணியல் சிந்தனை என்ன?

**அதற்கான அடித்தளங்கள் என்ன? ஆயர்கள் மாமன்றத்தின் இறுதி அறிக்கை சில கோட்பாடுகளை அடித்தளங்களாக முன்வைக்கின்றது:**

1. படைப்பின் அடிப்படையிலான கிறித்தவ மானுடவியல் (Christian Anthropology based on creation): மாமன்றத்தின் இறுதி அறிக்கைப் பகுதி 2 எண் 52 வலியுறுத்துவதுபோல, ஆண்-பெண் சமத்துவத்தின் அடிப்படைத் தொடக்கநூல் 1:27 எடுத்தியம்பும் படைப்பின் தன்மை: "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். ஆணும்-பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்". ஆணும்- பெண்ணும் கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டதால் இருவரும் சம மாண்பிற்கும் உரிமைக்கும் உரியவர்கள். The Final Document affirms that women are not an "add-on" but integral to the Synodal Church, reflecting a complementary, enriching Christian vision. படைப்பில் பார்வையில், பெண்கள் வெறும் "கூடுதல் சேர்க்கைகள்" அல்ல. அவர்கள் திரு அவையின் அடிப்படையான சாரத்திற்கே இன்றியமையாதவர்கள்.

**2.** திருமுழுக்கின் சமத்துவ அழைப்பு (Women's equality as a Baptismal reality) இறுதி அறிக்கைப் பகுதி 2 எண் 60 கூறு கின்றதுபோல, "திருமுழுக்கின் மூலம், கடவுளின் மக்களாகிய பெண்களும் ஆண்களும் சம மாண்பினைப் பெற்றுள்ளனர்." இந்தச் சம மாண்பு என்பது பெண்களுக்கு வழங்கப்படும் சலுகை அல்ல. மாறாக, இறைத்திட்டத்தின் வெளிப்பாடு. ஆவணம் கலாத்தியர் 3:27-28 வசனங்களை நினைவுபடுத்துகின்றது: "கிறிஸ்துவோடு இணைந் திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனை வரும் கிறிஸ்துவை அணிந்துகொண்டீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்." The sacrament of baptism endows all of us with the same diginity of Christ..

**3.** பெண் உரிமைக்கான குரல் ஒட்டுமொத்தத் திரு அவை யின் குரல் (Synodal Feminism is deeply Ecclesial): மாமன் றத்தின் அறிக்கைப் பகுதி 2, எண் 60 குறிப்பிடுகின்றதுபோல, இன்று திரு அவையில் பெண்களின் ஆளுமைத்திறன் நமது பங்குத்தளங் களில், பள்ளிகளில், மருத்துவமனைகளில் மற்றும் சமூகப்பணியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. நமது ஆலய நிகழ்வுகளில் பெரிதும் பங் கேற்பது பெண்களே. குடும்பங்களில் நம்பிக்கையின் முதல் சாட்சிகளாகத் திகழ்வது நமது தாய்மார்களே. என்றாலும், அவர்களது உரிமைக்கும் மாண்புக்கான போராட்டம் ஏனோ பெண்களுக்கு மட்டுமே உரிய பிரச்சினையாகச் சித்தரிக்கப்படுகின்றது என்பதை ஆவணம் சுட்டிக் காட்டுகின்றது.

The Final Document affirms that women's inclusion is not a separate issue, but vital to the good of the whole People of God. பெண்கள் வளர்ச்சிய டையும்போது, திருஅவையும் முழுமையாக வளர்ச் சியடைகின்றது. பெண்களின் புறக்கணிப்பும் மறுதலிப்பும் நம் அனைவரையும் பலவீனப்படுத்துகிறது. Marginalizing women weakens the Church and dims Christ's presence. Their leadership enriches discernment and calls for reform. As the document says, "What comes from the Holy Spirit cannot be stopped."

**மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி**

The Witness of the Synod Experience: 2022 முதல் 2025 வரை நாம் மேற்கொண்ட ஒருங்கியக்கப் பயணம் பெண்களின் பங்களிப்பின் சிறப்பையும் மகத்துவத்தையும் நமக்கு நினைவுபடுத் தியிருக்கின்றது. வரலாற்றில் முதன்முறையாக, ஆயர்கள் மாமன்றத்தின் பொதுக்குழுவில், முழு உறுப்பினர்களாகப் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது (எண் 6b). இது வெறும் அடையாளப் பங்கேற்பு அல்ல் ஒட்டுமொத்தத் திரு அவையின் வாழ்வியலில் பெண்கள் இன்றியமையாத பங்கை வகுப்ப வர்கள் என்பதை அங்கீகரிக்கும் உறுதியான நட வடிக்கையாக இது அமைந்தது. அவர்களின் குரல்கள், அனுபவங்கள் மற்றும் அறிவுச்செழுமை மாமன்றத்தின் உரையாடல்களுக்கும், மாமன்றத்தின் இறுதி ஆவணத்திற்கும் பங்களித்தது. சகோதரி நத்தாலி பெக்கார்ட் (XMCJ) அவர்களை ஆயர்கள் மாமன் றத்தின் துணைச் செயலராக நியமித்தது மற்றுமொரு வலுவான அடையாளமாக இருந்தது.

ஆவணம் மாமன்றத்தின் முடிவை அல்ல. மாறாக, ஒரு புதிய பயணத்தின் தொடக்கத்தை வரையறுக்கின் றது. இந்தத் தொடக்கம் நம்மை ஒருங்கிணைந்த ஆய்ந்து அறியும் தேடலுக்கும், ஆக்கப்பூர்வமான செயலாக்கத்திற்கும் அழைக்கின்றது. எதிர்வரும் கூட்டொருங்கியக்கப் பயணத்தில் பெண்களின் பங்களிப்பு ஊக்குவிக்கப்பட மாமன்றத்தின் இறுதி ஆவணம் உணர்த்தும் அதன் வழிமுறைகளைப் பட்டியலிட விரும்புகின்றேன்.

**1.** பகுதி 2, எண் 6 - திரு அவையின் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் (Implement Canon Law'): பெண்களின் ஆளுமைக்கான தற் போதைய விதிகளை முழுமையாகப் பயன்படுத்துதல் (v.fh: Diocesan curia, pastoral councils, finance committees).

**2.** பகுதி 2, எண் 6 - உள்ளடக்க மொழியைப் பயன்படுத்துதல் Inclusive language: மறையுரை, மறைக்கல்வி, மறைபரப்புப் போதனை மற்றும் திரு அவையின் ஆவணங்களில் பெண்களின் பங்களிப்பு களை மையப் படுத்துதல். பெண் புனிதர்கள், இறையியலாளர்கள், சிந்தனையாளர்கள், அருளாளர்கள் மற்றும் மறையாளர்களின் பங்களிப்பை விவரித்தல்.

**3.** பகுதி 2, எண் 76 - புதிய மறைப்பணிகளைக் கண்டறிதல் Expand ministries: பொது நிலையினருக் குரிய மறைப்பணியின் புதிய வழிமுறைகளைக் கண்ட றிந்து, செவிமடுத்து வழிநடத்தும் மறைப்பணிக்குப் பெண்களை நியமித்தல். Discern new forms of lay ministry, including the proposal for a "ministry of listening and accompaniment"

**4.** பகுதி 2, எண் 6 - திருத்தொண்டர் பணி பற்றிய ஆய்வு: Continue discernment on women's access to the diaconate grounded in theological and historical dialogue. பெண்களின் திருத்தொண்டர் பணி குறித்த வரலாற்று மற்றும் இறையியல் சார்ந்த சிந்தனை தொடர வேண்டும். எனினும், பெண்களின் பங்கேற்பைக் குறித்த சிந்தனையைக் குருத்துவத் திருத்தொண்டர்

(தொடர்ச்சி 7ம் பக்)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**துண்டுப் பிரசுரங்கள்**

65. An American Hindu on Hinduism
66. A Critique of Mr. Phelp's Letter
67. Protestant sects and the Bible
68. Universal Religion
69. 2nd Epistle to the Padre Gabriel Jovan
70. Tactics of the Tamitian
71. Where Christianity and other Religions meet (1923)
72. பிரபஞ்ச விசார நிருபணம்
73. உழவு சால் சம்பாஷணை
74. சாதுவின் உண்மை
75. சின்னக் கதிர்காமம்
76. ஏன் மடுவுக்கு வந்தோம்
77. செபமாலைத் தியானம்
78. மறு பிறப்பு சமாதானம்
79. புனிதர் வரலாறுகள் விமர்சனம்
80. The Great Promise
81. Sacred Hymns தர்க்கப் பிரசங்கப் பிரசுரங்கள்
82. குருவில்லாத வித்தை (23 - 6 - 28)
83. மெய்பாதி பொய்பாதி (10 - 6 29)
84. கணக்குண்டு வழக்குண்டு (18 - 6 - 29)
85. பாவத்தைத் தீராத் தீர்த்தம் (16 - 6 - 30)
86.மாதாவோ - அம்மனோ (21 - 6 - 32)
87.எல்லார்க்கும் பொது வழி (15- 6 - 33)
88.இடுக்கமான வாசல் - நெருக்கமான வழி (18 -6- 29)
89. தர்மத்தின் தப்பறை (21 - 6 - 32)
90. உலகத்தின் ஞானச் சூரியன் (3 - 6 - 1938)
91. இரட்சணிய பலி (10 - 6 -39)
92. செபமாலை மாதா (10 - 6 - 40)
93. ஈடேறுவோரின் திருக்கூட்டம் (12 -6 - 41)
94. Life of Christ critically examined (29 – 5 – 31)
95. தெய்வீக விருந்து (1904)
96. திவ்விய பூசை மகத்துவம் (1948)
97. லூர்த்தில் நடக்கும் அதிசயங்கள்
98. தபசுகாலப் பிரசங்கம்
99. ஆண்டவர் சரித்திரம் I (1937)
100. ஆண்டவர் சரித்திரம் II
101. ஞான ஒடுக்கப் பிரசங்கம்
102. கத்தோலிக்க திருச்சபையும் அதன் போதகங்களும் (1937)
103. எனது பூசைப் புத்தகம் (தமிழாக்கம் - 1939)
104. மெய்க்குருமாரும் பொய்ப் போதகங்களும் (6 - 2 - 34)
105. உரும்பிராயில் வேதந் தொடங்கிய வெள்ளி யூபிலி (14th Sept. 1933)
106. ஆதிச் சமயம் எது? (23 - 12 -1904)
107. எம்மதமும் சம்மதமா? (ஞநிவ. 1934)

**தமிழ் மொழி:**

108. தமிழ் மொழி ஒப்பியல் அகராதி (6ஆம் பாகம் 1938)
109. How Tamil was built up (1927)
110. தமிழ் சொற்பிறப்பாராய்ச்சி (18 April 1932)
111. தமிழ் மொழி ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பு -I (1923)
112. An English - Tamil Dictionary (Manuscript)*
113. Some Laws of Dravidian Etimology
114. The Dravidian Element in Sinhalese
115. Root words of the Dravidian group of Languages
116. The Proposed Comparative Tamil Lexicon (1929)
117. The Laws of Infilial Consonants
118. தர்க்கம் (Logic, 5th June 1938)
119. சொற்பிதர் வழி (1928) *
120. விஞ்ஞான அகராதி*
121. சிங்களமும் தமிழும் *

சுவாமி ஞானப்பிரகாசர் அத்தனை வேலைப் பழுக்களின் மத்தியிலும் இவ்வளவு நூல்களையும் எழுதினாரா என்பது ஆச்சரியம் தரக்கூடிய விடயம்தான். பலரின் நன்மை கருதி அவர் எழுதியதாக எனக்குக் கிட்டிய நூல்களின் தொகுப்பையே இங்கு தந்துள்ளேன். அவர் பதிப்பித்த நூல்களின் தொகுப்பு இங்கு தரப்பட வில்லை. அவற்றை, அமுது, நெஞ்சே நினை 1975, என்னும் நூலில் பார்வையிடலாம். (*) குறியிடப்பட்ட நூல்கள் அச்சேறாதவை.

நகமும் சதையுமான குரு நண்பர் இவருக்கு 16 மாதங்கள் முன்பே இந்தியாவின் மங்களூர், கோவாவில் பிறந்து, யாழ். புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்து, சமகாலத்திலேயே பயின்று இரண்டு வருடங்கள் முன்பு யாழ்ப்பாண மறைமாவட்டக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி. சல்வடோர் மனுவல் வாஸ் அடிகளைப் புகழ்ந்து பாராட்ட சுவாமியார் தவறிய தேயில்லை. கோவைப் பிரிவினைவாதம் மாதோட்டத்தில் உச்சத்தில் இருந்தவேளை ஆயர் யூலன் ஆண்டகையால் அனுப்பப்பட்ட வாஸ் கொடுத்த நெத்தியடி பற்றி இவர் "மிகவும் பரிதாபத்திற்குரிய ஒரு கோவைப் பிராமண மிகுவல் பிலிப் பால் தொடங்கப்பட்ட பிரிவினைக்கு இன்னுமொரு கோவைப் பிராமணனால் நெத்தியடி வழங்கப்பட்டது" என்றார். பல தூரமான பங்குகளில் பணியாற்றினாலும் யாழ்ப்பாணம் வரும் வேளைகளில் ஞானப்பிரகாசருடன் இணைந்து பல இடங்களுக்கும் சென்று வரத் தவறுவதில்லை.



"மிகவும் திறமைமிக்க, நிறைவான சொல்லாதிக்கமுடைய, தமிழ் மறையுரைஞரும் மறையறிவில் சிறந்த கல்வியாளரும் அருமையான துணையாளரும்" என்று கூறியதனூடாக ஞானப்பிரகாசர், வாஸ் உடன் ஏற்கெனவே ஒன்றாக வாழ்ந்த குருமடப் பயிற்சிக் காலத்தை இரைமீட்கின்றார்.

**ஆய்வுப் பணியில் அடிகளார்**

இவரது மொழியியல் சிந்தனைகள், தமிழ் வரலாறு, சொற்பிறப்பியல் அகராதி முதலியவற்றிற்குப் பிரமதப் பெரியோர்களிடமிருந்து ஆதரவுகள் கிடைக்கத் தொடங்கின. 1932இல் திருப்பனந்தாள் ஸ்ரீகாஞ்சிமடத் தலைவர் இவரைக் கௌரவித்து பண உதவியும் அளித்தார். செந்தமிழ், கலாநிதி, இந்துசாதனம் மற்றும் ஜேஉமனியிலிருந்து வெளிவரும் அந்ரோப்போஸ் ஆகிய சஞ்சிகைகள் இவரது கட்டுரைகளை வரவேற்றுப் பிரசுரித்தன. மேலும் மதுரைத் தமிழ்ச் சங்கம் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம், என்னும் முக்கிய தமிழ் அபிவிருத்தி அமைப்புகள் தங்கள் அங்கத்தவராக இவரை ஏற்று இவரது மதிப்பு வாய்ந்த ஆலோசனைகளைச் செயற்படுத்தின.

1940இல் இலங்கையின் ஆளுநர் இவரை இலங்கை வரலாற்றுச் சுவட்டு ஆவணக் காப்பகக் குழுவின் அங்கத்தவராக ஆக்கினார். 1944 பெப்ரவரியில் இலங்கைப் பல்கலைக்கழக செனற் சபையில் உறுப்பினராகப் பணியாற்ற அழைக்கப்பட்டார். 8 - 3 - 1946இல் யாழ்ப்பாணத்தில் வீரமாமுனிவர் விழாவிற்குத் தலைமைப் பேருரையாற்றினார். 14 - 09 - 1936இல் பம்பாயில் பணியாற்றிய மிகவும் பிரபல்யம் வாய்ந்த, பம்பாய் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் அருட்தந்தை கெராஸ் அடிகள் யாழ். மத்திய கல்லூரியில் உரையாற்ற வந்தபொழுது மொகஞ்சதாரோ, ஹரப்பா சுட்டகளிமண் முத்திரை ஒன்றை இவரிடம் கொண்டுவந்து அதன் குறியீடுகள் பற்றி ஆய்வு செய்தார். சுவாமி ஞானப்பிரகாசர் வழங்கிய மேற்கூறிய ஆய்வுகள் 'செந்தமிழ்' சஞ்சிகையில் வெளிவந்தன. 1939இல் சுவாமி ஞானப்பிரகாசரின் மொழி ஆய்வின் பேராற்றலைப் புகழ்ந்து நினைவுறுத்தும் நோக்குடன் ஜேர்மனி அரசு முத்திரையொன்றை வெளியிட்டது. அவர் அந்த முத்திரையை எவருக்கும் காட்டவில்லை. பல வருடங்களாக அவருடன் பணியாற்றிய உபதேசியார் சந்தியாப்பிள்ளையும் ஒருசில குருக்களும் அது பற்றிக் கூறியதுண்டு. இவர் இறந்த 34 வருடங்களின் பின்பே 22 - 5 -1981இல் இவருக்கு இலங்கை அரசு முத்திரை வெளியிட்டது. இவரது பிறப்பின் நூற்றாண்டு விழா கொழும்பு கொட்டாஞ்சேனையில் தொடங்கி மட்டக்களப்பில் தொடர்ந்து, 30 - 08 - 1975இல் இறுதியாகப் பல நாட்கள் முன்தயாரிப்புடன் யாழ். முற்றவெளியில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

**அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா**

**ஆய்வில் மொழிப்புலமை**

பன்மொழிப்புலவராக அறியப்படும் சுவாமியவர்கள் கொண்டிருந்த ஆழமான இறைகொடை பெரும்பாலான மொழிகளைத் தெரிந்து வைத்திருந்ததாகும்.

இணையத்தள வலைப்பின்னல் இல்லாத அக்காலத்தில் கிடைத்த சொற்ப வசதிவாய்ப்புகளைக்கொண்டு மொழிகளுக்கிடையேயான தொடர்புகளை ஒப்பீட்டுரீதியாக இனங்கண்டு தன் ஆராய்ச்சித் திறமை காரணமாகவும் இன்றைய சர்வதேச தொலைத்தொடர்பு சமூகத்தொடர்பு வசதிகளற்ற அக்காலத்தில் கையில் கிடைத்த உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகள், பல்வேறு பணிகள் மத்தியிலும் தான் பலருடன் ஏற்படுத்திக்கொண்ட புற்றீசல்கள் போன்ற ஏராளமான கடிதத்தொடர்புகள் காரணமாகவும்(அந்நாட்களில் கடிதங்களுக்கு எவரும் உடன் பதில் தரக்கூடிய நிலை அவசியமாக இருந்தது) தந்திச்செய்திகள் காரணமாகவும் புத்தக வாசிப்பில் எவ்வேளையிலும் ஈடுபட்டதன் காரணமாகவும் மொழிப்புலமையை வளர்த்துக் கொண்டாரெனலாம்.

(தொடரும்....)

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**8. அமலமரித்தியாகியான சுவாமி ஞானப்பிரகாசர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் ஓர் அமலமரித்தியாகி.**

அமலமரித்தியாகிகள் என்ற உலகளாவிய துறவற குழுமத்தைச் சேர்ந்தவர். "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க ஆண்டவர் என்னை அனுப்பினார்" (லூக். 4:18) என்பது அமலமரித்தியாகிகளின் உள்ளுயிராய் இருக்கிறது.

ஏழைகளுக்காகத் தங்களை அர்ப்பணிப்பது என்பது அ.ம.தி.களின் இயக்குநர் தந்தை புனித இயூஜின் டீ மசனெற் அவர்களின் இதயத் துடிப்பாகவும், இறையரசின இலட்சியமாகவும் இருந்தன. இயூஜின் டி மசனெற் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர். பிரான்சியப் புரட்சி(1789) அந்நாட்டில் யாரையுமே விட்டுவைக்கவில்லை. இயூஜினும் அதற்கு விதிவிலக்கல்ல.

இவ்வனர்த்தம் முழுத் தேசத்தையும், ஏன் மக்களையுமே இருந்த இடம் தெரியாமல் ஆக்கி விட்டது. இயூஜின் டீ மசனெற் 1782ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் முதலாம்நாள் பிறந்தவர். எட்டு வயதில் அகதி வாழ்வின் அவலம் அவருக்கு ஆரம்பிக்கின்றது. ஏறக்குறைய பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று ஆண்டுகள் பலதரப்பட்ட நெருக்கடியான, நிம்மதியிழந்த சூழலிலே தமது வாழ்வை நடத்துகின்றார். இக்காலப் பகுதியில் ஆண்டவரின் அருட்கரம் அவரோடு இருந்தது என்பதில் ஐயமில்லை.

மனிதம் மழுந்து, புனிதம் புதைந்து, மனிதாபிமானம் மறைக்கப்பட்டு, மனிதநேயம் மறுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தைக் காண்கின்றார். பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு, மனித மாண்பையும், மகத்துவத்தையும் இழந்த அடிமைகளாக நடத்தப்பட்ட, சாதாரண ஏழை பாமர மக்களைத் தன் பாமர மக்களைத் தன் 'உடன்பிறப்புக்களாக' ஏற்றுக்கொண்டார்.

அப்போதே ஏழைகளுக்கான பணி ஆரம்பமானது. முதலில் தன்னை ஒரு பணிக்குருவாக அர்ப்பணிக்கிறார். தன்னைப் போன்ற நான்கு அல்லது ஐந்து அருட்பணியாளர்களுடன் அன்று தொடங்கிய குழுமம் இன்று ஆல்போல் தழைத்து வேரூன்றி சுமார் அறுபத்தெட்டு நாடுகளில் பரந்திருக்கின்றது.

ஆயர் பொஞ்ஜின் ஆயர் யூலன் அருட்தந்தை ஸ்மித் அருட்தந்தை சாள்ஸ் மத்தியூஸ், அருட்தந்தை டண், அருட்தந்தை லோங், ஞானப்பிரகாசர் போன்ற எத்தனையோ குழுமத்தின் வரலாற்றிலும், எம் நாட்டின் சரித்திரத்திலும் மங்காத தடம் பதித்தவர்கள்.

இவர்களின் வழித் தோன்றல்கள் எப்போதுமே வாழையடி வாழையாக வந்துகொண்டும், வாழ்ந்து கொண்டும், வளர்ந்து கொண்டும் இருப்பார்கள். காரணம் "ஏழைகள் எப்போதும் உங்களோடு இருப்பார்கள்" (மத். 26:11). ஆகவே ஏழைகள் இருக்கும் வரை ஏழைகளுக்காக வாழ்பவர்கள் வாழ்ந்துகொண்டும், இயங்கிக்கொண்டும், இருந்துகொண்டும் இருப்பார்கள்.

ஈழநாட்டுடனான அமலமரித்தியாகிகளின் தொடர்பும்(1847), தொண்டும் 178 ஆண்டுகளைக் கடந்து விட்டன. இந்த நீண்டகாலப் பகுதியில் கல்விக்கூடங்களையும், கல்லூரிகளையும், ஆலயங்களையும், நூலகங்களையும், ஸ்தாபனங்களையும், அச்சகங்களையும், தொழிலகங்களையும், பயிற்சி நிலையங்களையும், குருமடங்களையும் அமலமரித்தியாகிகள் உருவாக்கி, நிர்வகித்து வந்திருக்கின்றனர்.

எண்ணிலடங்காத பேரறிஞர்களும், பேராசிரியர்களும், கல்விமான்களும், புத்திஜீவிகளும், தொண்டர்களும், இறைபணியாளர்களும் எம் மத்தியில் தோன்றக் கருவாய் இருந்திருக்கிறார்கள். இன்றும், ஏழைகளுக்கான நற்செய்திப் பணி தொடர்கிறது.

நல் வாழ்வுக்கான தியானங்கள், உள்ளம் நொறுங்குண்டவர்களுக்கான உளநலப் பணிகள், நோயாளர் சிறைப்பட்டோருக்கான ஆன்மீக ஆற்றுப்படுத்தற் பணிகள், சமூகசேவைப் பணிகள், கல்விப் பணிகள், உருவாக்கப் பணிகள், ஆன்மீக வழி காட்டல் பணிகள், சிறுவர் பராமரிப்புப் பணிகள், பங்குப் பணிகள் போன்ற இறையரசுத் தொண்டுகள் தொடர்ந்தாற்றப்படுகின்றன. எனினும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்து, அறிந்து எழுகின்ற தேவைகளைக் கருத்திற் கொண்டு இந்நேரத்தின் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணிப்பது காலத்தின் கட்டாயமாகும். இதுவே அமலமரித்தியாகிகளின் இறை அழைப்பும், இறையரசிற்கான அர்ப்பணமுமாகும்.

இது பலமுகங்களோடு வாழுகின்ற ஏழைகளுக்கான பணியை வேகப்படுத்தவும், விரிவுபடுத்தவும் துணைபுரியும்.

**அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி**




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(மணி, மன்னார்)*

**கேள்வி: சிலர் படித்தவர்கள்போலக் காட்டிக்கொள் கிறார்கள்! ஆனால், உண்மையில் அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதில்லையே! ஏன்!?**

ப: மணி, ஒரு மணியான கேள்வி கேட்டிருக்கிறீர்கள். ஒரு பேராசிரியர் தொடர்வண்டியில் பயணித்துக் கொண் டிருக்கும்போது ஒருவிவசாயி அவரருகில் இருப்பதை அவதா னிக்கிறார். சலிப்படைந்திருந்த பேராசிரியர், நேரத்தைக் கடத்த ஒரு விளையாட்டை முன்மொழிய முடிவு செய்கிறார். "நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்பேன். உங்களால் பதில் சொல்ல முடியாவிட்டால், நீங்கள் எனக்கு 05 டொலர் கொடுங்கள். பிறகு, நீங்கள் என்னிடம் ஒரு கேள்வி கேளுங்கள். என்னால் பதில் சொல்ல முடியா விட்டால், நான் உங்களுக்கு 500 டொலர் தருகிறேன். உங்களுக்குச் சம்மதமா?" என்று பேராசிரியர் கேட்கிறார். விவசாயி சரியென்று தலையசைக்கிறார். பேராசிரியர், "பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?" என்று தொடங்குகிறார். விவசாயிக்குப் பதில் தெரியவில்லை. அமைதியாக 5 டொலரை விவசாயி எடுத்துப் பேராசிரியரிடம் கொடுக்கிறார். இப்போது விவசாயியின் முறை: "மலை ஏறும்போது மூன்று கால்களும், கீழே வரும்போது நான்கு கால்களும் உள்ள விலங்கு எது?" என்று கேட்கிறார். பேராசிரியர் கண்களை அகலவிரித்துப் பார்க்கிறார். ஆராய்ந்து ஆராய்ந்து பார்க்கிறார். ஆனால் அவரால் ஒரு பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. விரக்தியடைந்த அவர், விவசாயியிடம் 500 டொரைக் கொடுக்கிறார். விவசாயி புன்னகையுடன் பணத்தை எடுத்துக்கொண்டு சாய்ந்து தூங்குகிறான். அதை இத்தோடு விட்டுவிட விருப்பமில்லாமல், பேராசிரியர் விவசாயியை ஆர்வத்தோடு எழுப்பி, "சரி, அது என்ன விலங்கு?" என்று கேட்கிறார். விவசாயி அமைதியாக 5 டொலர்களை எடுத்து, பேராசிரியரிடம் கொடுத்து விட்டு மீண்டும் தூங்கச் செல்கிறார். இதுதான் படிப்புக்கும் புத்திசாலித்தனத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசம்! படித்த பேராசிரியர்! புத்திசாலி விவசாயி!

*(காந்தி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: செம்மணி, சிந்துப்பாத்தி மயானத்தில் அகழப்படும் மனிதப் புதைகுழி விவகாரத்தில் உள் ஊர்ப் பொறிமுறையில் நீதி கிடைக்க வாய்ப்பிருக்கிறதா?**

ப: இவ்வளவு காலமும் நடந்த பிரச்சினைகளுக்கு உள்ளூர் பொறிமுறைகளில் தீர்வு கண்டதால்தான் நாடு இக்கேடு கெட்டுப் போய்க் கிடக்கிகுது! வாயைக் கிளறாதீங்க காந்தி!

*(நளா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இந்நாள்களில் வீதி விபத்துக்கள் மிக மோசமாக நடக்கின்றதே! நாட்டில் சட்டம், ஒழுங்கு இருக்கிறதா?**

ப: இருக்கிறது நளா. ஆனால் கடைப்பிடிப்பவர்களும் அவற்றை அமுல்படுத்துபவர்களும்தான் குறைவு! ஆங்கிலத்தில் ஒரு கூற்று இருக்கிறது. அதனைத் தமிழில் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம் என நினைக்கிறேன்: ஒழுங்கின்மை ஒழுங்காகப் பின்பற்றப்படுகிறது! இதுதான் நம்நாட்டை இன்று பிடித்திருக் கும் நோய்களுக்கான அடிப்படைக் கிருமி!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ஜீலை 23 'ஒன்றாய் நாம் பறந்திடுவோம்' என்ற தொனிப் பொருளில் சோஷலிச இளைஞர் சங்கம் சகோதரத்துவ தினத்தைத் கொண்டாட எனத் தெற்கிலிருந்து அழைப்பு விடுத்துள்ளது. இதற்கு வடக்கில் சார்பான அதேவேளை எதிரான குரல்கள் ஒலிக்கின்றன. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

ப: நான் என்னத்தை நினைப்பது! நீங்கள் நினைப்பது போலத்தான் நானும் நினைக்கிறன் என நான் நினைக்கிறன்! சரி, விடயத்திற்கு வருவோம். மேற் சென்ன விடயம் நல்ல விடயம். ஆனால் இறக்கைகளை முறித்துவிட்டுப் பறபற என்றால் எப்படிப் பறப்பது? இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குமுன் செய்யப்பட வேண்டிய - நீதி வழங்கப் பட வேண்டிய - ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய நிறைய விடயங்கள் உண்டு. அவற்றைச் செய்யாமல் இவ்வாறான நிகழ்வுகளைச் செய்வதால் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் ஏற்படுத்தாது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்!

*(கனி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சிலர் எப்படி எப்படியோ எல்லாம் மற்றவர்களுடன் நன்றாகப் பழகுவார்கள்! பதவிக்கு வந்து விட்டால் பெரிய பந்தாக் காட்டுவார்கள்? இவர்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள்?**

ப: கனி, 'கத்தியைத் தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு' என்ற பாடலில், "இங்கே இருப்பது சிலகாலம். இதற்குள் ஏனோ அகம்பாவம். இதனால் உண்டோ ஒரு லாபம். இதை எண்ணிப்பாரு தெளிவாகும்" என்றொரு அடியிருக்கிறது. அவருடைய காதில் விழும் படியாகச் சிலதடவைகள் இராக தாளத்தோடு முணுமுணுத்துப் பாரு(டு)ங்கள். அவருடைய 'றியக்சன்' என்ன என்பதை அறியத் தாருங்கள்!

# அமைதியை மேம்படுத்துவதில் திருஅவை தொடர்ந்து குரல் எழுப்புகிறது திருத்தந்தை

திருத்தந்தையர் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்போவில் இருந்து வத்திக்கானுக்குத் திரும்பும் வேளையில் பதினான்காம் லியோ அவர்கள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போது,

"ஒவ்வொருவரும் ஆயுதங்களை விட்டுச் செல்லவும், ஒவ்வொரு போருக்கும் பின்னால் இருக்கும் பணம் சம்பாதிக்கும் மனப்பான்மையை விட்டுவிடவும் நாம் ஊக்குவிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

உரோமைக்கு அருகிலுள்ள திருத்தந்தையர் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல் போவில் 16 நாட்கள் தங்கிய பிறகு வத்திக்கானுக்குத் திரும்பும் வேளையில், அவரைச் சந்தித்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது இவ்வாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை, உலகளாவிய ஆயுத வர்த்தகத்தையும், போரைத் துண்டுவதிலும் மனித வாழ்க்கையை மதிப்பிழக்கச் செய்திலும் அதன் பங்கையும் கண்டித்தார். மதத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களுக்குமான அமைதியை ஏற்படுத்துவதிலும், மனித மாண்பைக் காப்பதிலும், மிகுந்த அளவில் கவனம் செலுத்த வேண்டும் என்று செய்தியாளர்களிடம் வலியுறுத்தினார் திருத் தந்தை.

காசா போன்ற மோதல்கள் இடம்பெற்று வரும் பகுதிகளை தான் பார்வையிட விரும்பினாலும், அத்தகைய வருகைகள் உண்மையான தீர்வுகளுக்கு வழிவகுக்காது என்றும் அவர்களிடம் குறிப்பிட்டார் திருத்தந்தை.

திருத்தந்தையர் கோடை விடுமுறை இல்லமான காஸ்தல் கந்தோல்போவில் தான் கழித்த நேரத்தைப் பற்றி குறிப்பிட்ட திருத்தந்தை, அதை ஒரு "வேலை விடுமுறை" (working holiday) என்று கருதி, தற்போதைய நிகழ்வுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதாகவும் அவர்களிடம் விவரித்தார்.

மிகவும் குறிப்பாக, அமைதியை மேம்படுத்துவதில் திரு அவை எழுப்பும் குரலின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தைக் குறித்தும் அவர்களிடம் சுட்டிக் காட்டினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

## விண்ணக வாழ்வில் 15ம் ஆண்டு நினைவு

அன்னை மடியில்
20 . 05 . 1925



இறைவன் அடியில்
17 . 07 . 2010

அமரர்
**ஆகத்தம்மா பெர்னாண்டோ**



அன்பின் சிகரம் அணைந்து- ஆண்டுகள் 15 ஆனதுவே
எம் இல்லத்து அரசி நீங்கள் இன்று
ஈசன் பாதம் சென்றீரோ- உம் பாசம் தேடி
நாம் ஊமையாய் கலங்குகின்றோம்
என்றும் நித்தியத்தில் இளைப்பாறிட
ஏறெடுக்கின்றோம் எம் செபங்களை
அன்பின் இறைவா அமைதி அளித்திடுவீர்...



*என்றும் அன்புடன்*
*குடும்பத்தினர்*

# பெண்களின் பங்களிப்பு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அருள்பொழிவிற்கு நாம் சுருக்கி விடக்கூடாது.

**5.** பகுதி 5, எண் 148 - கூட்டுப் பங்களிப்பிற் கான உருவாக்கம்: Formation for Co-responsibility: எதிர் கால குருக்கள், திருத்தொண்டர்கள் மற்றும் ஆயர்களின் உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்தல்.

In conclusion, my reflections can be summarized in five key phrases:

Repentance starts the journey Acknowledge past neglect to spark true synodal conversion. Faith over ideology Catholic feminism flows from Revelation, not secular agendas. Theology drives action Rooted in complementarity, baptismal dignity, and prophetic mission. Women's witness is vital - Their leadership is essential to an inclusive Synodal Church. Act with purpose - Advance women's roles through structural and cultural reform. நமது கூட்டொங்கியக்கப் பயணம் நம்பிக்கையின் விதைகளை விதைத்துள்ளது. பெண்களின் இன்றியமையாதமதிப்பும் அழைப்பும் திரு அவையின் அடையாளத்திற்கும் பணிக்கும் ஆணி வேர் என்பதை உணர்த்தியுள்ளது. The Final Document calls us to a synodal Church where women are central, not marginal-guiding, teaching, advocating, and sustaining the community with their unique gifts. கூட்டொருங்கியக்க இன்னிசையில் பெண்களின் குரல்களும் இனிமை சேர்க்கட்டும்.

# விசுவாச வாழ்விற்கு நீங்கள் சான்றுகள்!

முதியோரே, நீங்கள் அனைவரும் விசுவாச வாழ்விற்கு சான்று பகர்கின்றீர்கள் என்று கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

ஜுலை 21ம் திகதி காஸ்தல் கந்தோல்போவிலுள்ள சாந்தா மார்த்தா இல்லத்திற்குச் சென்று அங்குள்ள முதியோர்களைச் சந்தித்தபோது அவர்களிடம் இவ்வாறு கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

முன்னதாக, திருத்தந்தையரின் கோடை விடுமுறை இல்லமான வில்லா பார்பெரினிக்கு அருகில் அமைந்துள்ள இந்த முதியோர் இல்லத்திற்குத் திருத்தந்தை சென்றபோது, அங்குள்ள துறவற சபை அருட்சகோதரிகளால் அவர் அன்புடன் வரவேற்கப்பட்டார்.

அங்குள்ள சிற்றாலயத்தில் சிறிதுநேரம் அமைதியாக இறைவேண்டல் செய்த பிறகு 80 முதல் 101 வயதுடைய 20 முதியவர்கள் மற்றும் பராமரிப்பாளர்களைத் தனிப்பட்ட முறையில் வரவேற்று உரையாடி மகிழ்ந்தார் திருத்தந்தை.

இந்தச் சந்திப்பின்போது நற்செய்தியில் மார்த்தா மற்றும் மரியாவின் வாழ்வைக் குறித்து எடுத்துரைத்த திருத்தந்தை, அவர்களது வாழ்க்கையின் இந்த இறுதிக்கட்டத்தில் இறைவேண்டலையும் ஆன்மீகச் சிந்தனைகளையும் ஏற்று வாழுமாறு அவர்கள் அனைவரையும் ஊக்குவித்தார்.

இறுதியாக, அவர்களின் இறைவேண்டல்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட திருத்தந்தை, அவர்களை "நம்பிக்கையின் அடையாளங்கள்" என்று அழைத்ததுடன் திருஅவையில் அவர்களின் தொடர்ச்சியான முக்கியத்துவத்தையும் உறுதிப்படுத்தினார்.

# நாவாந்துறைப் பங்கில் நற்கருணை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



நாவாந்துறைப்பங்கில் பிள்ளைகளுக்கான முதல் நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு, உதவிப் பங்குத்தந்தை அருட்பணி பொ. டினுஷன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 21ம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை யூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் புனித பரலோக அன்னை ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் 24 சிறுவர்கள் நற்கருணை அருட்சாதனத்தை முதல் முறையாகப் பெற்றுக்கொண்டனர்.

# குருநகர்ப் பங்கில் நற்கருணை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



குருநகரப் பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யூலை மாதம் 12ஆம் திகதி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களின் தலை மையில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்ப லியில் 84 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தை பெற்று க்கொண்டார்கள்.

# முல்லைத்தீவு மறைக்கோட்ட இளையோருக்கான சிறப்பு ஒன்றுகூடலும் கலைநிகழ்வும்



முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான சிறப்பு ஒன்றுகூடலும் கலைநிகழ்வும் கடந்த 06ஆம் திகதி உடையார்கட்டு புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெற்றது. யூபிலி ஆண்டில் இயேசுவின் கரம்பற்றி முழுமனித ஆளுமை வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் இளையோரை வழிப்படுத்தும் நோக்கில் முல்லைத்தீவு மறைக்கோட்ட இளை யோர் ஒன்றிய இணைப்பாளர் அருட்தந்தை அல்வின் கிருபா கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் ஒன்றியத்தலைவர் செல்வன் லொக்ஷான் அவர்களின் தலைமையில் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்நிகழ்வில் வழிபாடுகளும் கலை நிகழ்வுகளும் கருத்துரைகளும் கருத்தமர்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மறைக்கோட்டப் பங்குகளை சேர்ந்த 200ற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை இராஜசிங்கம், யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோன் குரூஸ், யாழ். மறைமாவட்ட கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை அன்ரோ டெனீசியஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் முல்லைத்தீவு றோ.க மகா வித்தியாலய அதிபர் திரு. நல்லையா அமிர்தநாதன் மற்றும் ஊடகவியலாளர் திரு. குமணன் கணபதிப்பிள்ளை ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

# நவாலி புனித பேதுருவானவர் ஆலயக் குண்டுத்தாக்குதலின் 30 ஆண்டு நினைவேந்தல்



யாழ்ப்பாணம் நவாலி புனித பேதுருவா னவர் ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதக் குண்டுத்தாக்குதலில் கொல் லப்பட்டவர்களின் 30ஆம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு கடந்த 09ஆம் திகதி உணர்வுபூர்வமான முறையில் அங்கு அனுஸ்டிக்கப்பட்டது. பங்குத்தந்தை அரு ட்தந்தை அன்ரனிதாஸ் அவர்களின் ஒழு ங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் சில்லாலைப் பங்குத்தந்தை அரு ட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அவர் களின்தலைமையில் திருப்பலியும் தொட ர்ந்து நினைவுத் தூபி அமைந்துள்ள இட த்தில் அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெற் றது. இத்தாக்குதலில் ஆலயத்திலிருந்த குழந்தைகள் பெண்கள் உட்பட 147க்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 400க்கும் அதிகமா னோர்படுகாயம் அடைந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவுப் பங்கு புனித ஞானப்பிரகாசியார் பீடப்பணியாளர் மன்றவிழா



நெடுந்தீவுப் பங்கில் முன் னெடுக் கப்பட்ட புனித ஞானப்பிரகாசியார் பீடப்ப ணியாளர் மன்றவிழா யூலை மாதம் கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது. பங்கு த்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர் களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் அன்றைய தினம் காலை புனித யுவானியார் ஆலயத்தில் அருட்தந்தை சோபன்றூபஸ் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து பீடப்பணியாளர்க ளின் வாழ்வும் பணியும் தொடர்பான கருத்துரையும் விளையாட்டு நிகழ் வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் 60 வரையான பீடப்பணியாளர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

# வியாகுலப்பிரசங்கப் போட்டியில் வெற்றிபெற்றோருக்குக் கௌரவிப்பு



கிறிஸ்தவ மத அலுவலகத் திணைக்களத்தினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட வியாகுலப்பிரசங்கம் மற்றும் ஒப்பாரிப் பாடல் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் நாவாந்துறைப் பங்குத்தந்தை அருட்பணி யூஜின் பிரான்சிஸ் அவர் களினால் பாராட்டி கௌர விக்கப்பட்டனர்.

# கரித்தாஸ் செடெக் நிறுவன மேல்தளக் கட்டிடத்தொகுதி திறப்பு விழா




கரித்தாஸ் தேசிய மற்றும் சர்வதேசக் கூட்டங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் கூட்டுப்பணிகளை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கை கரித்தாஸ் செடெக் நிறுவன கட்டிடத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த மேல்தள கட்டிடத்தொகுதி கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அதன் திறப்பு விழா யூன் மாதம் 27ஆம் திகதி நடைபெற்றது. தேசிய கரித்தாஸ் செடெக் இயக்குநர் அருட்தந்தை லூக் நெல்சன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை கரித்தாஸ் நிறுவன புதிய தலைவரான இலங்கை ஆயர் மன்றத் தலைவரும் குருநாகல் மறைமாவட்ட ஆயருமான பேரருட்தந்தை ஹெரல்ட் அன்ரனி பெரேரா அவர்கள் கலந்து கட்டிட தொகுதியை ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். அக்கட்டிடத்தொகுதியில் நவீன வசதிகளுடனான மாநாட்டு மண்டபம், 12 விருந்தினர் அறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் அன்றைய தினம் கரித்தாஸ் செடெக் நிறுவன புதிய தலைவரான பேரருட்தந்தை ஹெரல்ட் அன்ரனி பெரேரா மற்றும் துணைத் தலைவரான இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் வைமன் குருஸ் ஆகியோருக்கான வரவேற்பும் இதுவரை காலமும் தலைவராக கடமையாற்றிய யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் துணை ஆயராகக் கடமையாற்றிய கொழும்பு உயர் மறைமாவட்டத் துணை ஆயர் பேரருட்தந்தை மக்ஸ்வெல் டி சில்வா ஆகியோருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் 13 மறைமாவட்டக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர்கள், அருட்தந்தையர்கள், தேசிய நிறுவனப் பணியாளர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருவிவிலியப் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்கள்



தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட திருவிவிலிய போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களைப்பெற்று நெடுந்தீவுத் திருஅவைக்கு பெருமைசேர்த்த மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர். புனித யுவானியார் ஆலயத்தில் இடம்பெற்ற கடந்த 13 திகதி ஞாயிறு திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி பத்திநாதன் அடிகளார் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வில் மாணவிகளு க்கான. பதக்கங்களை அருட்பணி சோபன் றூபஸ் அடிகளார் அணிவிக்க அருட்பணி றொபேட் ஜேக்கப் அடிகளார் சான்றிதழ் களை வழங்கிவைத்தார். தேசிய ரீதியில் தங்கப் பதக்கங் களைபெற்று பெருமை சேர்த்த மாணவிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

# பளைப் பங்கில் நற்கருணை பேரணி



கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவை சிறப்பித்து பளைப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட நற்கருணை பேரணி கடந்த 06ஆம் திகதி அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இப்பேரணி பளை புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் ஆரம் பமாகி அறத்திநகர் குழந்தை இயேசு ஆலயத்தை சென்றடைந்து அங்கு இடம்பெற்ற நற்கருணை ஆசீர் மற்று ம் திருப்பலியுடன் நிறைவடைந்தது. நற்கருணை வழிபாட்டை வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் மற்றும் இரணைமாதாநகர் பங்குத்தந்தை அருட்தந்தை தயதீபன் ஆகியோர் நெறிப்படுத்தியதுடன் திருப்பலியைப் பங்குத்தந்தை அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இப்பேரணியில் பங்குமக்கள் பக்தியுடன் பங்குபற்றியிருந்தனர்.

# மெலிஞ்சிமுனைப் பங்கில் விழிப்புணர்வு வீதி நாடகம்



பெண்கள் அடக்குமுறை தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் வல்லமை மற் றும் தோழமை அமைப்புக்கள் இணை ந்து முன்னெடுத்த விழிப்பு ணர்வு வீதி நாடகம் கடந்த 02ஆம் திகதி மெலி ஞ்சிமுனை பங்கில் நடை பெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை தயாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மெ லிஞ்சிமுனை கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் நடை பெற்றது.

சின்னமடு செபமாலை மாதா திருத்தல விழா

நற்கருணை விழா
04.08.2025 திங்கட்கிழமை
மாலை 5.00 மணிக்கு
திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்

யூபிலி ஆண்டில் திருத்தல விழாத் திருப்பலி
05.08.2025 செவ்வாய்க்கிழமை
காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

அன்னையின் பரிந்துரை வழியாக இறையாசீர் பெற அன்புடன் அழைக்கின்றோம்.



பரிபாலகர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.